

கல்கி
பொருளடக்கம்

லர் 5 | தழ் 43 — 1946 ஜூன் 2 — வியய? வைகாசி 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

பரவாயில்லை; நமது சென்னை மாகாணம் இன்னமும் இந்திய தேசத்துக்கு வழி காட்டிக் கொண்டுதா னிருக்கிறது; சில காரியங்களில் முதன்மையாக நின்றுதான் வருகிறது.

இந்திய தேசத்திலேயே முதன் முதலாகச் சட்டசபை அக்கிராசன பதவிக்கு ஒரு ஹரிஜனப் பிரமுகரைத் தேர்ந்தெடுத்த பெருமை சென்னை மாகாணத்துக்கு இப்போது கிடைத்திருக்கிறது.



அத்தகைய பெருமையைச் சென்னை மாகாணத்துக்கு அளித்த ஸ்ரீ ஜே. சிவஷண்முகம் நமது இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கிறார்.

எம். ஏ. பட்டதாரியும், ஏற்கெனவே சென்னை நகர மேயர் பதவியைச் சிறப்புடன் வகித்தவருமான ஸ்ரீ ஜே. சிவஷண்முகம் உறுதியுள்ள காங்கிரஸ்வாதி; காந்தி மகானின் சிறந்த பக்தர்; அவருடைய அரசியல் வாழ்க்கை மாசற்றது. இன்றைக்கு ஒன்று நாளைக்கு ஒன்று பேசுகிற சஞ்சலமுள்ள கபடக் கூட்டத்தை அவர் சேர்ந்தவரல்ல. உத்தியோகத்துக்காகவோ பதவிக்காகவோ கொள்கையை மாற்றிக் கொண்டவரல்ல.

சுமார் 190 பேர் அடங்கிய காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் காங்கிரஸ் பெருந் தலைவர்களின் அபிப்பிராயத்தை உறுதியுடன் ஆதரித்த 36 பேர் அடங்கிய சிறுபான்மைக் கட்சியில் அவர் தீரத்துடன் நின்றார்.

யாருடைய ஆதரவையும் நம்பாமல் யாருடைய தயவையும் எதிர்பாராமல் தம்முடைய சொந்த யோக்யதையில் நம்பிக்கை வைத்துச் சட்டசபை அக்கிராசன பதவிக்கு நின்றார்.

சந்தர்ப்பங்கள் அவருடைய சுய நம்பிக்கைக்குத் துணை செய்தன. மந்திரி சபையின் அபேட்சகரைத் தோற்கடித்து 40 அதிக வோட்டுகள் பெற்று வெற்றி யடைந்தார்.

ஸ்ரீ சிவஷண்முகத்தின் அறிவும் திறமையும் தன்னம்பிக்கையும் ஒழுக்க பலமும் அவருக்கு [illegible] துணை நின்று உதவுமென்று எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி சிறப்புடன் வகித்துப் புகழளித்த சட்டசபை அக்கிராசனப் பதவிக்கு ஸ்ரீ சிவஷண்முகத்தின் மூலமாக இன்னும் அதிக சிறப்பு ஏற்படும் என்று நம்புகிறோம்.



சரும சுகத்திலிருந்து சரும அழகு ஏற்படுகிறது!

ரெக்ஸோனா வினால் சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்

உங்கள் சருமம் உண்மையாய் எப்பொழுதும் அழகுடன் இருப்பதற்கு முன் அது ஆரோக்ய முடையதாய் இருக்கவேண்டும். அதை ஆரோக்யமுடன் வைத்துக் கொள்ளவேண்டும்; இல்லையேல், அதன் அழகு வெகு விரைவில் மறைந்துவிடும். சருமத்தைக் காப்பாற்றி, அதன் அழகை விருத்தியாக்கவே ரெக்ஸோனு வழங்கப்பட்டு வருகிறது. அழகுள்ள, பசுமை வாய்ந்த விரைவில் நுரையைத் தரும் இந்த டாய்லட் சோப்பில் சுகமளித்துச் சரும நோய்களைக் குணப்படுத்தும் கேடில் என்ற கிருமி நாசினியாகிய மருந்து சேர்ந்திருக்கிறது. விரைவிலுண்டாகும் ரெக்ஸோனுவின் சிறந்த நுரை சருமத்தின் ஒவ்வொரு அடிபாகத்திலும் இந்த ஆரோக்யத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தைக் கொண்டுபோய் சேர்த்து நன்மையைக் கொடுக்கிறது. அதே சமயத்தில் அதன் நுரை சருமத்தின் மீது படிந்துள்ள அழுக்கையும் வியர்வையால் ஏற்படும் மலினங்களையும் சுத்தி செய்கிறது. சருமம் தூய்மையடைகிறது; அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது; அதை மேன்மேலும் பளபளப்பாக்கி, காப்பாற்றுகிறது; அதை நன்கு போஷிக்கத் துணை செய்கிறது. சரும சுகத்தின் பொருட்டு ஒவ்வொரு ஸ்நானத்திற்கும் ரெக்ஸோனுவையே உபயோகியுங்கள்.



குழந்தைகளுக்கு ரெக்ஸோனு: ரெக்ஸோனுவின் நுரை மிருதுவாயிருப்பதால் அது குழந்தையின் மெல்லிய சருமத்திற்கு சிறந்தது. டாக்டர்கள் அதை சிபார்சு செய்கிறார்கள். குழந்தையின் சருமத்தை எரிச்சல், அரிப்பு முதலியவைகளிலிருந்து ரெக்ஸோனுவிலுள்ள கேடில் காப்பாற்ற உதவுகிறது.

★ரெக்ஸோனுவிலுள்ள கேடில் கிருமிகளை யொழிக்கும் ஒப்பற்ற மருந்து. சரும ஆரோக்யத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்ததும் குணமாக்கிப் போஷிக்கும் தன்மை வாய்ந்த தைலங்களும் சேர்ந்தது.



ரெக்ஸோனு ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக்காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சிரங்குகள், கடிகள், மச்சமறுக்கள் முதலிய எல்லாச் சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனு ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

R.P. 27-23 TM

REXONA PROPRIETARY LIMITE

கல்கி

மலர் 5 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 43

என்ன சேதி?

...பயணமானார்கள்!

மௌலானா ஆஸாதும் மகாத்மா ...யும் மூஸ்ஸோரிக்குப் பயணமானார்கள். ...ர்தார் வல்லபாய் பம்பாய்க்குப் பயண ...மானார். பண்டித ஜவாஹர்லால் அல் ...மாராவுக்குப் புறப்பட்டார். மிஸ்டர் ... வி. அலெக்ஸாண்டர் இலங்கைக்குக் ...ளம்பினார். ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ...ஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தார். இப் ...டியாகப் புது டில்லியிலிருந்து அவரவர் ...ளும் பிய்த்துக்கொண்டு போய் விட் ...டார்கள்! இந்திய சுதந்திரம், அரசியல் ...ர்ணய சபை, இண்டரிம் கவர்ன்மெண்ட் ...ல்லாம் அந்தரத்தில் தொங்கிக் கொண் ...ருக்கின்றன! மறுபடியும் எல்லாரும் ...ப்போது ஒன்று சேர்வார்கள், என்ன ...டிவு செய்வார்கள் என்பதெல்லாம் மூடு ...ந்திரமாகவே இருக்கின்றன.

...பார்க்க வேண்டும்

மூன்று மந்திரிகளின் திட்டம் வெளி ...னபோது எதிர்பார்க்கப் பட்டதுபோல் ...ஜனாப் ஜின்னா அதைக் கண்ட துண்ட ...மாக்கி ஒரு அறிக்கை வெளியிட்டார். ...னால் அதை ஏற்பதா, மறுப்பதா என் ...பதை முஸ்லிம் லீக் நிர்வாக சபை முடிவு ...செய்யும் என்று முடித்தார். காங்கிரஸ் ...காரியக் கமிட்டியார், நமது "சுதேச ...மித்திரன்" பத்திரிகை கூறியதுபோல் "தெளிவில்லாத தீர்மானம்" ஒன்றை ...வெளியிட்டார்கள். அவர்களும் ஏற்பதா, ...நிராகரிப்பதா என்று முடிவு சொல்ல ...வில்லை. காரியக் கமிட்டி தீர்மானத்தைப் ...பற்றி மூன்று மந்திரிகள் அறிக்கை வெளி ...யிட்டார்கள். அந்த அறிக்கை மூலம் ...அவர்கள் நிலைமையை இன்னும் கொஞ்சம் ...குழப்பிப் புதிய சங்கடப் பிரச்னைகளை ...உண்டாக்கினார்கள். காந்தி மகாத்மா ...ஹரிஜன்" பத்திரிகையில் மிகத் தெளி ...வான பாஷையில் ஒரு கட்டுரை எழுதி ...னார். அதில் திட்டத்தைப் பெரிதும் ...பாராட்டி வரவேற்றிருக்கிறார். ஒரு விஷ ...யத்தில் மட்டும் அபிப்பிராய பேதத்தைத் ...தெரிவித்திருக்கிறார். அதாவது ஜனாப் ...ஜின்னாவின் திருப்திக்காக மாகாண அரசாங்கத்துக்கு மத்தியில் திரிசங்கு வட்டத் தொகுதி யொன்றை மேற்படி திட்டத்தில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் அல்லவா? அந்தத் தொகுதியில் சேரமாட்டோம் என்று சொல்ல மாகாணங்களுக்கு ஆரம்பத்திலேயே உரிமை உண்டு என்பது மகாத்மாவின் கருத்து. "இல்லை; புதிய அரசியல் திட்டம் நிர்ணயம் ஆன பிற்பாடு தான் அந்த உரிமை" என்று பிரிட்டிஷ் மந்திரிகள் சொல்கிறார்கள். இந்தச் சொற்ப வித்தியாசத்துக்காகத் தங்களுடைய திட்டத்தையே உருப்படாமல் செய்து "பழைய பெத்தனே பெத்தன்" என்று விட்டுவிடப் போகிறார்களா எனப் பார்க்க வேண்டும்.

நல்ல ஆரம்பம்

கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவிநாசி லிங்கம் தமது வேலையை நல்ல முறையில் ஆரம்பித்திருப்பது கண்டு மகிழ்ச்சி யடைகிறோம். முதன் முதலில், பள்ளிக்கூடங்களில் தாய் பாஷையின் அந்தஸ்தைக் குறித்துக் கவனம் செலுத்தி யிருக்கிறார். 1938-ல் காங்கிரஸ் மந்திரி சபை போட்ட உத்தரவுகளில் ஒன்று ஹைஸ்கூல்களில் எல்லாப் பாடங்களும் தாய் பாஷையில் போதிக்கப்பட வேண்டும் என்பதாகும். அந்த உத்தரவுக்கு விதிவிலக்கு வாங்கிக் கொண்டு இன்று மொத்தம் 175 ஹைஸ்கூல்களில் பழையபடி இங்கிலீஷிலேயே எல்லாப் பாடங்களையும் போதித்து வருகிறார்களாம். இதைக் கண்டித்து, "இனிமேல் விதிவிலக்குக் கொடுக்க முடியாது" என்று கல்வி மந்திரி சொல்லி யிருக்கிறார். இனிமேல் விதிவிலக்குக் கொடுக்காமலிருந்தால் மட்டும் போதாது; மேற்படி 175 ஹைஸ்கூல்களையும் மறுபடி தாய் பாஷைக்குத் திருப்பியாக வேண்டும். ஸ்ரீ அவிநாசிலிங்கம் கல்வித் துறையில் ஈடுபட்டுத் தாமே ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம் என்னும் அரிய ஸ்தாபனத்தை நடத்தி வருகிறவர். அவர் இதே ரீதியில் பெரு முயற்சி செய்து கணக்கற்ற ஊழல்கள் மலிந்து கிடக்கும் நமது மாகாணத்துக் கல்வி இலாகாவைச் சீர்திருத்தம் செய்தால் பொது மக்களின் பாராட்டுதலுக்கு உரியவராவார்.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ...எஸ். திருவேங்கடம், 443, ஆஸ்டின் டவுன், பெங்களூர்.

பிரதம மந்திரி பிரகாசத்துக்கு




நிலங்களில் பயிர் செழிக்கட்டும்!
5
பனைமரத்திலிருந்து வெல்லம் காய்ச்சுங்கள்.
6
7
பெரிய விருந்துகளை நிறுத்துங்கள்.
8
"அப்படியும் செய்யலாம்; என் காரியதரிசிகள் எழுதிக் கொடுத்த படி-யும் செய் யலாம்!"
"இப்படி எல்லாம் ஒழுங்காகக் காரியம் செய்தால் பஞ்சத்தைத் தடுக்க முடியும்."

மாட்டுக்குப் போடு!

மிஸ்டர் வி. எச். மாஸ்டர்மான் ரொம்ப நல்ல மனிதர்!

அசாத்தியமான நல்ல மனிதர்!

பழைய கவர்ன்மெண்டில் அட்வைஸரும் புதிய காங்கிரஸ் கவர்ன்மெண்டில் ஸிவில் சப்ளைஸ் கமிஷனருமான மிஸ்டர் வி. எச். மாஸ்டர்மான் வெகு அபாரமான நல்ல மனிதர்.

மாட்டுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்தை அவர் அறிந்தவர்.

மாட்டை விட மனிதன் மட்டமானவன் என்று அவர் கருதவில்லை.

"மாடு தின்னாத தானியத்தை மனிதனுக்குப் போடு!" என்று அவர் சொல்லவில்லை.

"மனிதன் தின்ன முடியாத தானியத்தை மாட்டுக்குப் போடு!" என்று தான் அவர் சொல்கிறார்.

மாஸ்டர்மான் மிக நல்ல மனிதர்!

அவர் மகாராஜரா யிருக்கவேண்டும்!

* * *

அன்னிய நாடுகளிலிருந்தும் அன்னிய மாகாணங்களிலிருந்தும் இறக்குமதியாகும் உணவுப் பொருள்களின் இலட்சணத்தைப் பற்றிச் சென்ற இதழில் நாம் எழுதியிருந்தோம். உளுத்த கோதுமையும் மக்கிய அரிசியும் வந்து தொலையலாம் என்று குறிப்பிட்டிருந்தோம். இதற்கு உதாரணமாக, சென்ற வருஷம் திருநெல்வேலி ஜில்லாவுக்குக் கோழி தின்னாத உளுத்த சோளம் வந்து பாடாய்ப் படுத்தியது பற்றியும் சொல்லியிருந்தோம்.

உதாரணம் தேடி அவ்வளவு பின்நோக்கிச் சென்றது நம் பேரில் தவறு என்று நமது சென்ற இதழ் வெளியான அன்றைக்கே ஏற்பட்டு விட்டது. மிஸ்டர் மாஸ்டர்மான் பத்திரிகை நிருபர்களைத் தமது காரியாலயத்துக்கு வரவழைத்து அந்தச் செய்தியைக் கூறினார். "அஸ்ஸாமிலிருந்து 9342 டன் அரிசி வந்தது. துரதிர்ஷ்டவசமாக அதில் ஒரு பகுதி கெட்டுப் போன நொய்யாக வந்திருக்கிறது. இதற்காகக் கவலைப்பட்டுப் பிரயோஜனம் இல்லை. மனிதர்களால் சாப்பிட முடியாவிடில் மாட்டுக்குப் போட்டால் போகிறது. அந்தப்படியே ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறேன்!" என்று மாஸ்டர்மான் துரை திருவாய் மலர்ந்தார். கேட்டவர்கள் அனைவரும் அகமகிழ்ந்து முக மலர்ந்தார்கள்!

மேற்படி மக்கிய நொய் அரிசியை மாட்டுக்குப் போட்டுப் பார்த்து அ தின்ன மறுத்த பிறகு, "மனிதர்களுக்குப் போட்டால் போகிறது!" என் மன்னன் சொல்லாமல் விட்டாரே என் எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்.

நெடுகிலும் இந்த முறையே ச காரில் அனுஷ்டிக்கப்படும் என்று எ பார்த்து நாமும் சந்தோஷப்படுகிறோ

உளுத்துப் போன கோதுமையையு மக்கிப் போன நொய்யையும் ஏரா மாய் இறக்குமதி செய்தாலும் அவையெல்லாம் உட்கொண்டுதான் ஆ வேண்டும் என்று நம்மை வலு கட்டாயப்படுத்த மாட்டார்கள் என் எண்ணிச் சந்தோஷப்படுகிறோம்.

வருகிற ஆறு மாதத்தில் நமது மாக ணத்தில் வெளிநாடுகளிலிருந் இறக்குமதியாகப் போகும் எத்தனையோ லட்சம் டன் தானியங்களை நினைத்து தான் இதையெல்லாம் சொல்கிறோம்.

* * *

மாஸ்டர்மான் வெளியிட்ட அற்புதமான செய்தி ஒருபுறமிருக்க, நீங்களும் நாமும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சட்டசபை வாதமும் நடந்து முடிந்து விட்டது.

சென்னை சர்க்காரின் உணவு கொள்கை என்ன வென்பதைப் பிரதம மந்திரி ஸ்ரீ பிரகாசம் இரண்டு சட்டசபைகளிலும் வெளியிட்டு விட்டார்.

உணவுப் பஞ்சத்திலிருந்தும் துணி பஞ்சத்திலிருந்தும் சென்னை மாகாணத்தைக் காப்பாற்றப் புதிய காங்கிரஸ் சர்க்கார் என்னென்ன கொள்கைகளைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள், என்னென்ன காரியத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கப் போகிறார்கள் என்பதைப் பிரதம மந்திரி சாங்கோபாங்கமாகச் சொல்லி விட்டார்.

அதாவது, கவர்ன்மெண்ட் இலாகா காரியதரிசிகள் எழுதிக் கொடுத்த அறிக்கையை ஒரு அட்சரம்கூட விடாமல் சட்டசபைகளில் படித்து விட்டார். கீழ்ச் சட்டசபையில் ஒரு தடவை படித்ததை, கொஞ்சம்கூடச் சளைக்காமல் மேல் சபையிலும் ஒரு தடவை முழுக்க முழுக்கப் படித்தார்.

"டைப் அடித்த விஷயத்தைத் தாங்கள் படித்ததாக வைத்துக் கொள்கிறோம். வீணாகச் சிரமப்பட வேண்டாம்!" என்று மேல் சபை அங்க,

நினர்கள் சிலர் சொல்லியும் ஸ்ரீ பிரகாசம் கேட்கவில்லை.

கவர்ன்மெண்ட் காரியதரிசிகள் இவ்வளவு கஷ்டப்பட்டு எழுதியதைப் படித்தே தீருவேன் என்று சொல்லி முழுதும் படித்துத் தீர்த்தார்.

அப்படி அவர் படித்த அறிக்கையானது மிஸ்டர் மாஸ்டர்மானின் அறிக்கை நமக்கு அளித்த உற்சாகத்தைக்கூட அளிப்பதாயில்லை.

மாகாணத்தின் தானிய நிலைமையைப் பற்றி அதில் கொடுத்திருக்கும் சில புள்ளி விவரங்கள் நம்மைக் கதிகலங்க அடிக்கின்றன.

எத்தனையோ லட்ச லட்சமான டன் கணக்கில் தானியங்கள் நம் தலையில் தொப்பு தொப்பு என்று விழுந்து மூச்சுத் திணற அடிக்கின்றன.

மற்றப்படி சென்ற நாலு வருஷத்துப் பழைய கதை அதில் சாங்கோபாங்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பர்மா அரிசி வருவது நின்றதிலிருந்து இம் மாகாணத்தில் உணவுப் பொருள் நெருக்கடி ஏற்பட்ட வரலாறு விவரமாகச் சொல்லப்படுகிறது. அதைச் சமாளிப்பதற்கு அட்வைஸரி கவர்ன்மெண்டார் கடைப்பிடித்த அருமையான கொள்கைகளும் திட்டங்களும் இன்னின்னவை என்று விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றன. அந்த மாமூல் கொள்கைகளையும் திட்டங்களையும் மேலும் விடாமல் கடைப்பிடிக்கப் போவதாக மகா ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றையும் படித்துக் கேட்ட பிறகு ஜனங்களின் மனதில் ஏற்படக்கூடிய எண்ணம், ''ஐயோ! நிலைமை இப்படியா?'' என்ற பீதியைத் தவிர வேறொன்றுமில்லை.

''நிலைமையைச் சர்க்கார் எப்படியாவது சமாளிப்பார்கள்!'' என்ற தைரியத்தைப் பிரதம மந்திரியின் அறிக்கை ஜனங்களுக்கு ஊட்டவில்லை.

''வரிந்து கட்டிக் கொண்டு கிளம்புவோம்; பஞ்சத்தை வெல்லுவோம்!'' என்ற உற்சாகத்தையும் அளிக்கவில்லை.

இந்த மாகாணத்தைப் பஞ்சத்திலிருந்து காப்பதற்குக் காங்கிரஸ் சர்க்கார் என்னென்ன பிரமாதமான காரியங்களைச் செய்யப் போகிறார்கள் என்பது அந்த அறிக்கையிலிருந்து வெளியாகவில்லை.

டில்லியும் ஸிம்லாவும் இருக்கும் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பித்து, ''டில்லி தெய்வங்களே! ஸிம்லா தேவர்களே! கருணை செய்யுங்கள்! அரிசியும் கோதுமையும் அனுப்பி வையுங்கள்! இன்னும் அதிகமாக அனுப்பி வையுங்கள்!'' என்று பிரதம மந்திரியின் அறிக்கை பிரார்த்தனை செய்கிறது.

நம்மையும் அத்தகைய பிரார்த்தனை செய்யும்படி தூண்டுகிறது.

அப்படி டில்லி, ஸிம்லா தெய்வங்கள் கருணை செய்யாவிட்டால் என்ன செய்யப் போகிறோமோ தெரியாது என்று ஸ்ரீ டி. பிரகாசம்காரு கையை அகலமாக விரிக்கிறார்.

* * *

பிரதம மந்திரி பிரகாசம் தந்திருக்கும் முக்கிய புள்ளி விவரங்களை — கதிகலங்கச் செய்யும் புள்ளி விவரங்களை — கொஞ்சம் கவனியுங்கள்.

அடுத்த அக்டோபர் மாதம் முடிய இம் மாகாண வாசிகள் ஏதோ உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு காலந்தள்ள வேண்டுமானால், அதாவது தலைக்கு 12 அவுன்ஸ் ரேஷன் தானியம் கிடைக்க வேண்டுமானால், — அதற்கு இன்றியமையாமல் வேண்டிய மொத்த உணவு தானியம் 12,72,000 டன்.

இதற்குச் சர்க்கார் கையிருப்பில் உள்ள தானியம் 5,21,000 லட்சம் டன்.

வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாகும் என்று வாக்குறுதி பெற்றிருக்கும் தானியம் 1,46,500 லட்சம் டன்.

இந்த மாகாணத்து விவசாயிகளிடமிருந்து உபரி தானியத்தை வாங்கிச் சேர்க்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவது 3,36,000 லட்சம் டன்.

அக்டோபர் வரையில் நிலைமையைச் சமாளிப்பதற்கு இன்னும் தேவையாயிருக்கும் தானியம் 2,68,000 டன்.

இவ்விதம் துண்டு விழும் 2,68,000 டன் தானியத்தை டில்லி சர்க்கார் மனம் வைத்துப் பிற மாகாணங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் வாங்கி அனுப்பினால்தான் உண்டு.

இல்லாவிட்டால், என்ன செய்கிறதென்று தெரியாது!

பிரதம மந்திரிக்கும் தெரியாது; சர்க்கார் இலாகாக்களுக்கும் தெரியாது; கடவுளுக்குத்தான் தெரியும்!

* * *

பிரதம மந்திரியின் அறிக்கையின் பேரில் இரண்டு சட்ட சபைகளிலும் பொதுப் படையான விவாதங்கள் நடந்தன. ஜனப் பிரதிநிதிகள் பலரும் பேசினார்கள்; தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள்.

அந்தப் பேச்சுகளில் எல்லாம் சிகரமாக விளங்கும் உபயோகமான பேச்சு டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்கள் மேல் சட்ட சபையில் பேசியதாகும்.

"என்ன செய்யப் போகிறோமோ, தெரியாது!" என்று டாக்டர் ராஜன் கையை அகல விரிக்கவில்லை.

"நிலைமையைச் சமாளிக்கலாம்; சமாளிக்க முடியும்" என்று டாக்டர் ராஜன் நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறார்.

வெறும் வாசா கைங்கரியமாக டாக்டர் ராஜன் அவ்விதம் நமக்கு உற்சாகமளிக்கவில்லை. திட்டமான வழிகளை, காரிய சாத்தியமான உபாயங்களைச் சொல்லுகிறார்.

நாலு வருஷம் விவசாயத்தில் பூரணமாய் ஈடுபட்டிருந்த அநுபவத்துடன் நம்பிக்கையோடு பேசுகிறார்.

"அஸ்ஸாமையும் பர்மாவையும் அமெரிக்காவையும் ஜாவாவையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். நமக்கு வேண்டிய உணவுப் பொருளை நாமே உற்பத்தி செய்ய முடியும்!" என்று உறுதி கூறுகிறார்.

அதற்குத் தாம் செய்த வெங்காய சாகுபடியின் கதையை உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார்.

யுத்தத்தின்போது இராணுவத்துக்கு வெங்காயம் அவசியமாகவும் அவசரமாகவும் வேண்டியிருந்தது.

இராணுவ அதிகாரிகள் கவர்ன்மெண்டாரிடம் சொன்னார்கள்.

கவர்ன்மெண்டார் விவசாய இலாகாவைத் தூண்டினார்கள்.

விவசாய இலாகா அதிகாரிகள் விவசாயிகளிடம் போனார்கள்.

விவசாயிகள், "ஆகட்டும்; வேண்டிய வெங்காயம் தருகிறோம். அதற்கு நாங்கள் கேட்கும் உதவிகளைச் செய்யுங்கள். முன் பணம் கொடுங்கள்: உரம் கொடுங்கள்; விளையும் வெங்காயத்துக்கு நல்ல விலை கொடுங்கள்!" என்றார்கள்.

இராணுவத் தேவையை முன்னிட்டுக் கவர்ன்மெண்டார் உடனே "ஆகட்டும்" என்று ஒப்புக் கொண்டார்கள்.

ஆறுமாதத்துக்குள்ளே இராணுவத்துக்கு வேண்டிய வெங்காயம் கிடைத்தது.

விவசாயிக்கு ஏக்கருக்கு ரூ. 600 வீதம் லாபம் கிடைத்தது!

இதே முறையை உபயோகித்தால் வேண்டிய உணவுப் பொருளைக் குறைந்த காலத்தில் உற்பத்தி செய்து பஞ்சத்தைத் தடுக்கலாம் என்று டாக்டர் ராஜன் சொன்னார்.

"இம் மாகாணத்தில் வேண்டிய நிலம் இருக்கிறது; உலகத்திலேயே மிகச் சிறந்த விவசாய உழைப்பாளிகள் இருக்கிறார்கள்; நமக்கு வேண்டிய தானியத்தை நாமே உற்பத்தி செய்து கொள்வதில் என்ன தடை?" என்று டாக்டர் ராஜன் கேட்டார்.

"விவசாயிகளுக்கு முன் பணம் கொடுத்து உதவுங்கள்; உரம் கொடுத்து உதவுங்கள்; விவசாய இலாகாவை ஒத்துழைக்கச் சொல்லுங்கள்; விளை பொருளுக்கு நல்ல விலை கொடுத்து 'லாபம் இருக்கிறது' என்று காட்டுங்கள்; பஞ்சம் எப்படிப் பறந்து போகிறது என்று பாருங்கள்!" என்றார்.

சர்க்காரின் ரேஷன் வெட்டும் திட்டம், தானிய சேகரிப்புத் திட்டம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளையும் ஊழல்களையும் எடுத்துக் காட்டினார்.

இறக்குமதியாகும் சத்தில்லாத தானியங்களை ஜனங்கள் சாப்பிடுவதால் பின்னால் பல வியாதிகள் ஏற்பட்டு மடிய நேரும் என்று எச்சரித்தார்.

மிக உபயோகமான இன்னும் பல யோசனைகளையும் கூறினார்.

டாக்டர் ராஜன் பிரசங்கத்தை லட்சம், பத்து லட்சம் என்ற கணக்கில் அச்சடித்து விநியோகிக்க வேண்டும்.

மந்திரிகளும், கவர்ன்மெண்டு அதிகாரிகளும், பொது ஜனங்களும் அதை ஒரு தடவைக்கு மூன்று தடவையாகப் படிக்க வேண்டும்.

டில்லியை நோக்கிக் கன்னத்தில் போட்டுக் கொண்டு அஸ்ஸாமிலிருந்து மக்கிப் போன அரிசி நொய்யும் பஞ்சாபிலிருந்து உளுத்துப் போன கோதுமையும் எப்போது வரும் என்று காத்திருப்பதில் பயன் இல்லை.

அப்புறம் அவற்றை மாட்டுக்குப் போடுவதிலும் புண்ணியமில்லை.

அந்தப் பணத்தைக் கொண்டு மாட்டுக்குப் பருத்திக் கொட்டை — பிண்ணாக்கு வாங்கிப் போடலாம்.

பஞ்சத்தைத் தடுத்து இம் மாகாணத்தின் நன்மையை நிரந்தரமாய்ப் பாதுகாப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.

அது இந்த மாகாணத்துக்குள்ளே உணவுப் பொருள் உற்பத்தியை அதிகமாக்குவதுதான்.

காங்கிரஸ் மந்திரிகளும், ஜனப் பிரதிநிதிகளும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், பொது ஜனங்களும் ஒத்துழைத்து ஒரு பெரிய பிரமாதமான முயற்சி செய்தால் மேலே கூறிய காரியம் சாத்தியமாகக் கூடியதே.

ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டவர்களுக்குச் சிந்தனா சக்தியும் செயல் திறமையுந்தான் வேண்டும்.

தீர்ப்புச் சொல்லுங்க!

"பாயின்ட்ஸ் மேன்"

---

1. தீர்ப்புச் சொல்ல உரியவங்க, தீர்ப்புச் சொல்லுங்க!
நீர விசாரித்து நல்ல தீர்ப்புச் சொல்லுங்க!

2. நேர்மையில்லா அதிகாரம் நின்றுலாவுது!
நீதி நாயம் நெனச்சுப்பார்த்து நீங்க சொல்லுங்க!

3. காலமெல்லாம் வெய்யிலிலே கடத்திப்பிட்டேங்க!
கடவுளுக்கே தெரியும் இந்த ஏழை பாடுங்க!

4. பாலத்திலே ரயிலு ஓடப் பார்த்திருக்கீங்க!
'பாயின்ட்ஸ்மேன்' இல்லாட்டிக் கவிழ்ந்து போகுங்க!

5. படியளக்கும் ரயிலுகாரன் குறைக்கப் போடுறான்!
பாதிவயிறு காயுதய்யா பிராணன் போகுது!

6. 'எஸ். எம்' என்று சொல்லுறப்போ மதித்துப் போறீங்க!
என்னசம்பளம் வாங்குறார்னு கேட்டுப்பாருங்க!

7. ஆபிசரு, மந்திரியாரு வாங்கிக்கிறாங்க
ஆயிரம் ரூபாய் பத்தாதென்று அலவுன்ஸ் கூட!

8. பாவிமக்கள் நாங்கமட்டும் பசித்திருப்போமா?
பார்த்து நன்றாய் அலசி ஒரு வார்த்தை சொல்லுங்க!

9. சம்பளத்தைக் கொஞ்சம்கூட்டிக் கொடுக்கச் சொல்லுங்க!
சரிசமமாய் எல்லாருக்கும் நிரவச் சொல்லுங்க!

10. 'டெம்பரரி'யைத் தள்ளாமே வைக்கச் சொல்லுங்க!
கும்பிடறேன் கையெடுத்து சோதிக்காதீங்க!

11. ஆசை காட்டி அதிகாரிங்க ஏச்சுப்பிட்டாங்க!
'பாசஞ்சரா', லட்சணமா, தீர்ப்புச் சொல்லுங்க!

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 45

"இதோ உன் காதலன்!"

நல்ல சமயத்தில் வந்து சிவகாமியின் உயிரைக் காப்பாற்றியவர் புலிகேசி சக்கரவர்த்தி அல்ல, புலிகேசி வேஷம் பூண்ட நாகநந்தியடிகள் என்பது நேயர்கள் அறிந்த விஷயமே.

வாசலில் நின்ற கோபங் கொண்ட கூட்டத்தைப் பார்த்துவிட்டுச் சிவகாமி கதவை அடைத்துக்கொண்டு உள்ளே சென்ற மறு நிமிஷமே குதிரைகள் விரைந்து வரும் சத்தம் கேட்டது. வருகிறவர்கள் பல்லவ வீரர்கள்தான் என்று நினைத்துக் கொண்டு ஜனக் கூட்டத்தில் பெரும்பாலோர் ஓட்டம் பிடித்தார்கள். எஞ்சி நின்ற ஜனங்களும் வீட்டைக் காவல் புரிந்த சளுக்க வீரர்களும் வருகிறவர் புலிகேசி சக்கரவர்த்தி என்பதைக் கண்டதும் வியப்பினால் ஸ்தம்பித்து நின்றார்கள். நர்மதையிலிருந்து துங்கபத்திரை வரையில் பரவிக் கிடந்த மகத்தான சாம்ராஜ்யத்தைப் பத்து நாளைக்கு முன்பு வரையில் ஏக சக்ராதிபதியாக இணையற்ற மகிமையுடன் ஆட்சி செலுத்திய தங்களுடைய மன்னருக்கு இவ்வளவு சீக்கிரத்தில் இத்தனை பெரிய துர்க்கதி நேர்ந்ததை யெண்ணி வாதாபி மக்கள் கலங்கிப் போயிருந்தார்கள். சக்கரவர்த்தியைப் பார்த்ததும் அங்கு எஞ்சி நின்ற ஜனங்கள் ஓவென்று கதறிப் புலம்பத் தொடங்கினார்கள். அதைப் பார்த்த சக்கரவர்த்தி தம் அருகில் நின்ற வீரனிடம் ஏதோ சொல்ல, அவன் கையமர்த்திக் கூட்டத்தில் அமைதியை உண்டாக்கிய பிறகு உரத்த குரலில் கூறினான்:—"மகா ஜனங்களே! இந்த ஆபத்துக் காலத்தில் நீங்கள் எல்லாரும் காட்டும் இராஜ விசுவாசத்தைக் கண்டு சக்கரவர்த்தி ஆறுதல் பெற்று உங்களுக்கெல்லாம் நன்றி செலுத்துகிறார். எதிர்பாராத வஞ்சகச் செயல்களினால் இத்தகைய துரதிர்ஷ்டம் நமக்கு நேர்ந்துவிட்டது. இதற்கெல்லாம் தக்க சமயத்தில் பழி வாங்கியே தீர்வதென்று சக்கரவர்த்தி உறுதிகொண்டிருக்கிறார். இந்த வீட்டிலுள்ள பல்லவ நாட்டு மங்கை வாதாபிக்கு நேர்ந்த விபரீதத்துக்கு ஒரு காரணம் என்பதை அறிந்து அவளைத் தக்கபடி தண்டிப்பதற்காகவே இங்கு வந்திருக்கிறார். அந்த வேலையை அவருக்கு விட்டு விட்டு நீங்கள் எல்லாரும் அவரவர்கள் உயிர் பிழைப்பதற்குரிய மார்க்கத்தைத் தேடும்படி கேட்டுக்கொள்கிறார். ஈவு இரக்கமற்ற பல்லவ அரக்கர்கள் அதர்ம யுத்தத்தில் இறங்கி உங்கள் வீடுகளைக் கொளுத்துகிறார்கள். அவரவர்களுடைய பெண்டு பிள்ளைகளையும் உடைமைகளையும் கூடிய வரையில் காப்பாற்றிக் கொள்ள முயலுங்கள். உடனே அவரவர்களுடைய வீட்டுக்குப் போங்கள்!"

இதைக் கேட்டதும் அந்த ஜனங்கள் இன்னும் உரத்த சத்தத்தில் அழுது கொண்டும் புலம்பிக் கொண்டும் அங்கிருந்து கலைந்துபோகத் தொடங்கினார்கள்.

பிறகு, சக்கரவர்த்தி அந்த வீட்டு வாசலில் காவல் புரிந்தவர்களைப் பார்த்து, "உங்களுடைய கடமையை நன்றாக நிறைவேற்றினீர்கள். மிகவும் சந்தோஷம். இனிமேல் நீங்கள் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பாருங்கள். உயிர் தப்பியவர்கள் எல்லாரும் நாசிகாபுரிக்கு வந்து சேருங்கள்! அங்கு நான் கூடிய சீக்கிரத்தில் வந்து உங்களைச் சந்திக்கிறேன்!" என்றதும், அந்த வீரர்கள் கண்ணில் நீர் ததும்பச் சக்கரவர்த்

திக்கு வணக்கம் செலுத்தி விட்டு அவ்விடமிருந்து சென்றார்கள். பிறகு சக்கரவர்த்தி தம்முடன் வந்த குதிரை வீரர்களின் தலைவனைப் பார்த்து "தனஞ்செயா! நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?" என்று கேட்க, "ஆம், பிரபு! நினைவிருக்கிறது" என்றான் தனஞ்செயன்.

"இன்னொரு தடவை சொல்கிறேன். இங்கிருந்து உடனே செல்லுங்கள். 'மாமல்ல சக்கரவர்த்திக்கு ஜே!' என்று கோஷம் போட்டுக்கொண்டு நகரை விட்டு வெளியேறுங்கள். காபாலிகர் பலிபீடத்துக்கு அருகில் உள்ள காட்டுக்கு வந்து சேருங்கள். உங்களுக்கு முன்னால் நான் அங்கு வந்து சேர்ந்து விடுவேன்!" என்று கூறிவிட்டு, மறுபடியும் அந்த வீரன் காதோடு, "பலிபீடத்துக்கருகிலுள்ள குகையில் பைத்தியம் கொண்ட காபாலிகை ஒருத்தி இருப்பாள். தாட்சண்யம் பாராமல் அவளைக் கொன்றுவிடு!" என்றார்.

தனஞ்செயனும் மற்ற வீரர்களும் அங்கிருந்து மறுகணமே புறப்பட்டுச் சென்று மறைந்தார்கள்.

பிறகு அந்த வீதி சூனியமாகக் காட்சியளித்தது.

* * *

புலிகேசி வேஷம் தரித்த நாகநந்தி சிவகாமியின் வீட்டுக் கதவண்டை வந்து மெதுவாகத் தட்டிப் பார்த்தார். பிறகு திட்டி வாசல் கதவைத் தொட்டுத் தள்ளியதும் அது திறந்துகொண்டது. உடனே அதன் வழியாக உள்ளே சென்று கதவைத் தாளிட்டார்.

வீட்டில் முன்கட்டை நன்றாய்ப் பார்த்துவிட்டு அங்கு யாரும் இல்லையென்று தெரிந்துகொண்டு பின்கட்டை அடைந்தார். கத்தி ஓங்கிய காபாலிகையின் கையைக் கெட்டியாகப் பிடித்துச் சிவகாமியின் உயிரைத் தக்க சமயத்தில் காப்பாற்றினார்.

"அட பாவி! வந்து விட்டாயா?" என்று காபாலிகை சொன்னதும், புத்த பிக்ஷு அவளைத் தமது காந்தக் கண்களால் உற்றுப் பார்த்து, "ரஞ்சனி! சற்று இங்கே வா!" என்று கூறிவிட்டு அப்பால் சென்றார். அந்த ர்க்க ராட்சஸி அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவர் பின்னோடு சென்றது சிவகாமிக்கு மிக்க வியப்பை யளித்தது. "ஆஹா! இந்தப் பிக்ஷுவின் சக்திதான் என்ன?" என்று மனதிற்குள் அதிசயப்பட்டுக் கொண்டு நின்ற இடத்திலேயே நின்றாள்.

பிக்ஷு ரஞ்சனியை ஒரு தூணின் மறைவுக்கு அழைத்துக் கொண்டு போனார். சிவகாமியின் காதில் விழாத குரலில், "ரஞ்சனி! இது என்ன காரியம் செய்தாய்!" என்றார்.

"பிக்ஷு! தவறு ஒன்றும் நான் செய்யவில்லையே? நகரம் எரிவதைக் கண்டதும் தங்களைப் பற்றிக் கவலை ஏற்பட்டது. தங்களைத் தப்புவித்து அழைத்துப் போவதற்காக வந்தேன்!"

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். ஆனால் அந்தப் பல்லவ நாட்டுப் பெண்ணை எதற்காகக் கொல்லப் போனாய்?"

"அதுவும் தங்களைத் தப்புவிப்பதற்காகத்தான். அவளால் தங்களுக்கு அபாயம் நேராதென்பது என்ன நிச்சயம்? அவள் விரோதி நாட்டுப் பெண்தானே?"

"மூடமே! அவளால் எனக்கு என்ன அபாயம் நேர்ந்துவிடும்?"

"பிக்ஷு! காதல் என்கிற அபாயம் மற்ற அபாயங்களைவிட மிகப் பொல்லாதது அல்லவா?"

"உன் மூடத்தனம் இன்னும் உன்னை விட்டுப் போகவில்லை. நீ இருக்கும்போது நான் இன்னொரு பெண்ணை ..."

"அப்படியானால் அவளைப் பற்றி ஏன் இவ்வளவு கவலை உங்களுக்கு? அவளை நான் கொன்று பழி தீர்த்துக் கொண்டால் உங்களுக்கு என்ன?"

"அசடே! அவளைப் பழி வாங்குவதற்கு உனக்கு என்ன காரணம் இருக்கிறது? எனக்கல்லவா இருக்கிறது? பல்லவன்பேரில் என்னுடைய பெரும் பழியைத் தீர்த்துக் கொள்வதற்காகவே அவளை நான் பத்திரமாய்ப் பாதுகாத்து வருகிறேன் என்று எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருக்கிறேன்?"

"பிக்ஷு! இப்போது ஒன்றும் மோசம் போய்விடவில்லையே?"

"மோசம் போய்விடவில்லை. ஒரு விதத்தில் நீ இங்கு அவசரமாய்ப் புறப்பட்டு வந்ததே நல்லதாய்ப் போயிற்று. ரஞ்சனி! நீ எனக்கு இச் சமயம் உதவி செய்ய வேண்டும். நான் சொல்கிறதைச் சொல்கிறபடி நிறைவேற்ற வேண்டும். இந்தச் சமயம் மட்டும் நான் சொல்கிறதைக் கேட்டால், அப்புறம் ஆயுள் முழுதும் உன் இஷ்டப்படி நான் நடப்பேன்......"

"பிக்ஷு! இது சத்தியமா?"

"எத்தனை தடவை உனக்குச் சத்தியம் செய்து கொடுப்பது? இப்போது சத்தியம் செய்துவிட்டு அப்புறம் அதை மீறினால் என்ன செய்வாய்?"

"என்ன செய்வதென்று எனக்குத் தெரியும்."

"அதைச் செய்து கொள். இப்போது நான் சொல்கிறபடி செய்!"

"சொல்லுங்கள், அடிகளே!"

பிக்ஷு தன் குரலை இன்னும் தாழ்த்திக்கொண்டு காபாலிகையிடம் அவள் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிச் சொன்னார்.

"நன்றாகத் தெரிந்து கொண்டாயல்லவா? அந்தப்படி செய்வாயா?" என்று கேட்டார்.

"கட்டாயம் செய்கிறேன்!" என்றாள் காபாலிகை. பிறகு, கோரப் புன்னகையுடன் "பிக்ஷு! தாங்கள் தங்களுடைய பழியைத் தீர்த்துக் கொண்ட பிறகு நான் என் பழியைத் தீர்த்துக் கொள்ளலாம் அல்லவா?" என்றாள்.

பிக்ஷுவின் முகம் சுளுங்கிற்று. "ஆ! உன் சந்தேகம் உன்னைவிட்டு அகலாது போலிருக்கிறது. எத்தனை தடவை 'ஆகட்டும்' என்று சொல்லியிருக்கிறேன்?......... போ, சீக்கிரம்! அதோ ரதமும் குதிரைகளும் வரும் சத்தம் கேட்கிறது!" என்றார்.

காபாலிகை அந்த வீட்டின் முன் கட்டில் பிரவேசித்து வாசல் கதவின் சமீபம் வந்தாள். இட்டி வாசற் கதவின் தாளைத் திறந்துவிட்டுப் பக்கத்தில் ஒதுங்கி நின்றாள். கத்தி பிடித்த அவளுடைய வலது கையை முதுகின் பின்னால் மறைத்து வைத்துக் கொண்டு, அபாயத்தை எதிர்பாராத ஆட்டின் மேல் பாய யத்தனிக்கும் பெண் புலியைப்போல் காத்திருந்தாள். அவளுடைய முகத்திலும் கண்களிலும் கொலை வெறி கூத்தாடிற்று.

• • •

காபாலிகையை வாசற் பக்கத்துக்கு அனுப்பி விட்டு நாகநந்தி பிக்ஷு சிவகாமியின் அருகில் வந்தார்.

வெறுப்பும் குரோதமும் ததும்பிய கண்களால் சிவகாமி அவரைப் பார்த்தாள்.

"சிவகாமி! இன்னமும் என் பேரில் சந்தேகம் தீரவில்லையா? இன்னமும் என்னிடம் நம்பிக்கை இல்லையா?" என்று கூறிய பிக்ஷுவின் கனிந்த குரல் சிவகாமிக்கு மனக் குழப்பத்தை உண்டாக்கிற்று.

"சக்கரவர்த்தி!......" என்று ஆரம்பித்தவள் தயங்கி நிறுத்தினாள்.

"ஓ! என் தவறுதான்!" என்று சொல்லி நாகநந்தி தம் தலையிலிருந்த கிரீடத்தை எடுத்தார்.

சிவகாமியின் முக பாவம் மாறியது. வெறுப்பும் குரோதமும் மறைந்து வியப்பும் கனிவும் தோன்றின.

"சுவாமி! தாங்களா இந்த வேடத்தில்......?" என்றாள்.

"ஆம், சிவகாமி! ஒரு சமயம் இந்த வேஷம் பூண்டு உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றினேன். இன்றைக்கு உன் உயிரைக் காப்பாற்றினேன்......... இன்னும் ஒரு கணம் சென்று வந்திருந்தால் அந்த ராட்சஸன் உன்னைக் கொலை செய்திருப்பான்! உன்னை மட்டுமா? வானமும் பூமியும் கண்டு வியக்கும்படியான அற்புத நடன கலையையும் உன்னோடு சேர்த்துக் கொன்றிருப்பான்!......"

"ஆனால்......" என்று சிவகாமி தயங்கினாள்.

"ஏன் தயங்குகிறாய், சிவகாமி! என்ன வேண்டுமோ, சீக்கிரம் கேள்!"

"ஒன்றுமில்லை. அவள் பேரில் தங்களுக்குள்ள சக்தியை நினைத்து வியந்தேன்!"

"அது காதலின் சக்தி, சிவகாமி! அந்தப் பெண் பேய் என்னிடம் காதல் கொண்டிருக்கிறது! அதனால்தான் அவள் என் கட்டளைக்கு அவ்வளவு சீக்கிரம் கீழ்ப்படிகிறாள்!"

சிவகாமியின் முகத்தில் புன்னகையைக் கண்ட பிக்ஷு மேலும் கூறி

ஞர் :—"ஆனால் இவன் எப்போதும் இந்தக் கோர ரூபத்துடன் இருந்ததாக நினையாதே! ஒரு காலத்தில் வாதாபி அரண்மனைக்குள்ளேயே இவன்தான் அழகியாக இருந்தான். ஒருநாள் உன்னைப் பற்றி இழிவாகப் பேசினான். அதன் காரணமாக இந்தக் கதியை அடைந்தான்!"

"ஐயோ! என்ன கோர தண்டனை!"

"அவன் இந்த மட்டோடு தப்பினான். ஆனால் அஜந்தா குகைச் சுவரில் நீ புலிகேசியின் அடி பணிந்ததாகச் சித்திரம் எழுதியவன் என்ன கதி அடைந்தான், தெரியுமா? அவனுடைய கழுத்தைத் தொட்டு ஆசீர்வதித்தேன். அவ்வளவுதான்; உடனே அவனுடைய தேகம் பற்றி எரிய ஆரம்பித்தது. சற்று நேரத்துக்கெல்லாம் அவன் ஓட்டமாய் ஓடி நதியின் வெள்ளத்தில் குதித்தான். அப்புறம் வெளியேறவேயில்லை!......"

"ஐயோ! என்ன கொடுமை!...... எனக்காக இதையெல்லாம் ஏன் செய்தீர்கள்?" என்று இருதயம் பதைபதைக்கச் சிவகாமி கேட்டாள்.

"ஆகா! இதுமட்டுந்தானா உனக்காகச் செய்தேன்? சிவகாமி! இன்றைக்கு இந்தப் பெரிய வாதாபி நகரம் தீப்பற்றி எரிகிறதே? இதற்குக் காரணம் யார் தெரியுமா? இன்று இந்த மாநகரத்தில் பல்லவ வீரர்கள் பிரவேசித்து அட்டகாசம் செய்வதற்கும், இந்த நகரத்தில் வாழும் லட்சோப லட்சம் ஜனங்கள் பித்துப் பிடித்தவர்கள் போல் அங்குமிங்கும் சிதறி ஓடுவதற்கும் காரணம் யார் தெரியுமா? தேசத்ரோகியும் குலத்ரோகியுமான இந்தப் பாதகன்தான்!" என்று சொல்லிப் பிக்ஷு படீர் படீர் என்று மார்பில் குத்திக்கொண்டார்.

இதனால் பிரமை பிடித்து நின்ற சிவகாமியைப் பார்த்து மேலும் சொன்னார் :—"சிவகாமி! இந்த நகரைவிட்டு அஜந்தா கலை விழாவுக்காக நான் போனபோது பல்லவன் படையெடுத்து வருகிறான் என்பதை அறிந்திருந்தேன். ஆயினும், என் சகோதரன் புலிகேசியிடம் அதைச் சொல்லாமல் மறைத்து அஜந்தாவுக்கு அவனை அழைத்துச் சென்றேன். ஏன் தெரியுமா? உன் ஒருத்தியின் சந்தோஷத்துக்காகத்தான். உன்னுடைய சபதம் நிறைவேறுவதைப் பார்த்து விட்டு நீ இந்த நகரத்தை விட்டுக் கிளம்புவதற்காகத்தான். உன்னுடைய வாழ்க்கை முழுவதும் பாழாகாமல் இருப்பதற்காகத்தான். அதற்காகவே, என் உயிருக்குயிரான உடன் பிறந்த தம்பியையும் பலி கொடுத்தேன். வாதாபி சக்கரவர்த்தியின் மரணத்துக்கு இந்தப் பாதகனே காரணம்!" என்று சொல்லிப் பிக்ஷு மறுபடியும் மார்பில் அடித்துக் கொண்டார்.

சிவகாமியின் உடம்பெல்லாம் பதறியது. பிக்ஷுவின் கையைக் கெட்டியாகப் பிடித்து அவர் அடித்துக் கொள்வதைத் தடுத்தாள்.

சிவகாமி தன் தளிர்க் கரத்தினால் தொட்ட உடனேயே நாகநந்தி சாந்தமடைந்தார்.

"சிவகாமி! உன்னைப் பதறும்படி செய்துவிட்டேன். மன்னித்து விடு!"

"மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது, சுவாமி! அன்று என் தந்தையின் உயிரைக் காப்பாற்றினீர்கள். இன்று என் உயிரைக் காப்பாற்றினீர்கள். இதற்காகவெல்லாம் தங்களுக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தப் பேதைக்காகத் தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்திருக்க வேண்டாம்......"

"சிவகாமி! உன்னை இன்னும் நான் காப்பாற்றி விடவில்லை. உன் தந்தைக்காகவும் உனக்காகவும் நான் செய்திருக்கும் காரியங்களுக்கு நீ சிறிதேனும் நன்றியுள்ளவளாயிருந்தால், இப்போது எனக்கு ஓர் உதவி செய்!"

"என்ன செய்ய வேண்டும், சுவாமி!"

"என்னிடம் நம்பிக்கை வைத்து என்னுடன் புறப்பட்டு வா!"

சிவகாமி திடீரென்று சந்தேகமும் தயக்கமும் கொண்டு, "எங்கே வரச் சொல்கிறீர்கள்? எதற்காக?" என்று கேட்டாள்.

"சிவகாமி! இந்தப் பெண் பேய் உன்னைக் கொல்ல யத்தனித்ததோடு உனக்கு வந்த அபாயம் தீர்ந்து விடவில்லை. பல்லவர்கள் வைத்த தீ அடுத்த வீதி வரையில் வந்துவிட்டது. இன்னும் அரை நாழிகையில் இந்த

வீட்டுக்கும் வந்து விடும். அது மட்டுமல்ல. இந்த வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த மூர்க்க ஜனங்களின் கூட்டத்தைப் பார்த்தாயல்லவா? அவர்கள் உன்னைத் துண்டு துண்டாக வெட்டிப் போட வெறி கொண்டிருக்கிறார்கள். இந்த நகரத்துக்கு நேர்ந்த விபத்துக்கு நீதான் காரணம் என்று நினைக்கிறார்கள்......"

இந்தச் சமயம் வீட்டு வாசலில் ஏதோ பெரிய ரகளை நடக்கும் சத்தம் கேட்டது. கதவு திறந்து மூடும் சத்தமும், அதைத் தொடர்ந்து ஒரு அலறலும், கீழே ஏதோ தொப்பென்று விழும் ஓசையும் விரைவாக அடுத்தடுத்துக் கேட்டன.

சிவகாமியின் உடம்பு நடுங்கிற்று.

"மூர்க்க ஜனங்களின் அட்டகாசத்தைக் கேட்டாயல்லவா, சிவகாமி? இங்கேயிருந்து இந்த மூர்க்க ஜனங்களால் நீ கொல்லப்பட வேண்டுமா? என்னுடன் வரமாட்டாயா?" என்றார் நாகநந்தி.

நாகநந்தி கூறுவது உண்மையென்று நம்பிய சிவகாமி, "அடிகளே! என்னை எங்கே எப்படி அழைத்துச் செல்வீர்கள்?" என்று கேட்டாள்.

"இத்தகைய அபாய காலத்தை எதிர்பார்த்து இந்த வீட்டிலிருந்து சுரங்க வழி ஏற்படுத்தியிருக்கிறேன். என்னை நம்பி நீ புறப்பட்டு வந்தால் அரை நாழிகை நேரத்தில் உன்னை இந்தக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்ப்பேன்!"

"சுவாமி! அது மட்டும் என்னால் முடியாது. உங்களை ரொம்பவும் வேண்டிக்கொள்கிறேன். இந்த வீட்டிலிருந்து நான் வெளிக் கிளம்ப மாட்டேன். தாங்கள் செல்லுங்கள்."

"சிவகாமி! நான் சொல்ல வந்ததை நீ முழுதும் கேட்கவில்லை. உன்னை எங்கே அழைத்துப்போக உத்தேசித்திருக்கிறேன் என்று தெரிந்து கொள்ளாமலே சொல்கிறாய். ஒரு வேளை முன்னொரு சமயம் சொன்னேனே, அந்தமாதிரி என்னுடன் அஜந்தா மலைக் குகைக்கு வரும்படி அழைப்பதாக எண்ணிக் கொண்டாயோ, என்னமோ? அந்தக் கனவையெல்லாம் மறந்து விட்டேன், சிவகாமி! உன் மனம் ஒரு நாளும் மாறப்போவதில்லையென்பதை அறிந்து கொண்டேன். இப்போது என்னுடைய கவலையெல்லாம் உன்னை எப்படியாவது தப்புவித்து உன் தந்தையிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்பதுதான். கோட்டைக்கு வெளியே சென்றதும் நேரே உன் தந்தையிடம் கொண்டு போய் உன்னை ஒப்புவிப்பேன். பிறகு என் வழியே செல்வேன்."

சிவகாமி சிறிது சிந்தனை செய்துவிட்டு, "சுவாமி! உங்களை நான் பூரணமாய் நம்புகிறேன். ஆனாலும் இந்த வீட்டை விட்டு நான் புறப்பட மாட்டேன். அவர் வந்து என்னைக் கரம் பிடித்து அழைத்துச் சென்றால் போவேன்; இல்லாவிட்டால் இங்கேயே இருந்து சாவேன்!" என்றாள்.

நாகநந்தியின் முகபாவம் திடீரென்று மாறியது. அவர் கண்களில் தணல் வீசியது. நெருப்புச் சிரிப்பு சிரித்த வண்ணம் "உன் காதலன் மாமல்லன் இங்கு வந்து உன்னை அழைத்துப் போவான் என்றா நினைக்கிறாய்? ஒருநாளும் இல்லை!" என்றார்.

"ஏன் இல்லை?" என்று ஒரு குரல் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். காபாலிகை "சிவகாமி! பிக்ஷு சொல்வதை நம்பாதே! இதோ உன் காதலன்!" என்று சொல்லிய வண்ணம் தான் தூக்கிக் கொண்டு வந்த உயிரற்ற உடலைத் தரையிலே போட்டாள். மார்பிலே கத்தி ஊடுருவியிருந்த அந்த உருவத்தைச் சிவகாமி கண் விழிகள் பிதுங்கும்படியாக ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தாள்.

அது கண்ணபிரானுடைய முகம் என்று தெரிந்ததும், "அண்ணா!......" என்று அலறிய வண்ணம் அந்த உடலின் அருகில் உட்கார்ந்தாள்.

கண்ணபிரானுடைய கண்கள் திறந்தன. சிவகாமியின் முகத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்தன. "தங்காய்! உன் அக்கா கமலி உன்னை ஆசையோடு எதிர்பார்க்கிறாள்; சின்னக் கண்ணனும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்!" என்று அவனுடைய உதடுகள் முணுமுணுத்தன!

மறுகணம் அந்த ஸ்நேகம் ததும்பிய முகத்தில் மரணக்களை குடிகொண்டது.

பேதை சிவகாமி மூர்ச்சையுற்றுத் தடாலென்று கீழே விழுந்தாள்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

புதிய ஹிந்துஸ்தானி ரிகார்டுகள்!

N. 26744 to N. 26747	துர்கா பிக்சர்ஸ் "துர்சன்"	கே. எல். ஸே., மீனு கபூர் முதலியோர்
N. 16735 to N. 16738	பாரத் லக்ஷ்மி பிக்சர்ஸ் "ஜீட்"	கந்தா, பார்க்கிஷன் முதலியோர்
N. 14822 to N. 14826	சித்ரா புரொடக்ஷன்ஸ் "ஜாக்கீ"	நினைத்தும், பாடியும்
N. 26741 to N. 26743, N. 26757	ரஞ்சித் மூவிடோன் "ராஜ்புடானி"	ஷமீடாபானு, கோரஸ் முதலியோர்
N. 26759 to N. 26762	ஆஸ்பான் புரொடக்ஷன்ஸ் "ஸாஜ்"	ரேணு, நீலம், ராதா ராணி முதலியோர்
N. 26753 to N. 26756	பிரபாத் பிலிம் கம்பெனி "ஹம் ஏக்ஹைன்"	துர்கா, வித்யா, நாசிக் முதலியோர்
N. 26748 to N. 26752	ஜயந்த் தேசாய் புரொடக்ஷன்ஸ் "ஸோஹ்னி மஹிவால்"	கோரஸ், துரானி முதலியோர்
N. 26739 & N. 26740	பஞ்சோலி பிரதர்ஸ் லிமிடெட் "ரீத்"	ராஜ்குமாரி, மோதி முதலியோர்
N. 26693 to N. 26696	சந்திரா ஆர்ட் புரொடக்ஷன்ஸ் "நாற்பது கோடி"	கோரஸ், நிர்மலா முதலியோர்
N. 26758	மஜார் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் "பேஹ்லி நஜர்"	ஷாஹீடா
N. 26726	ரஞ்சித் மூவிடோன் "மூர்த்தி"	முகேஷ்
N. 26731 to N. 26733	ஆத்ரே பிக்சர்ஸ் "பர்தேஸ்"	கோரஸ், சுரேந்திரா முதலியோர்
N. 5985 to N. 5987	வாத்திய சங்கீதம்	ராம்கோபால் ஆர்கெஸ்ட்ரா

M. SAMUEL

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்.

டம் டம் — டெல்லி — லாகூர் — பம்பாய் — மதராஸ்

அரசியல் அரங்கம்

"பூரண சுதந்திரம்" எழுதுவது

ஆச்சரியத்துக்கு மேலே......

சென்னையில் மந்திரி சபை ஏற்பட்ட பிறகு காங்கிரஸ் கட்சி அங்கத்தினரின் கூட்டம் சென்ற 23—5—46-ல் முதன் முதலாகக் கூடிற்று. காலஞ்சென்றவர்களைப் பற்றித் துக்கப்படும் பிரேரணை முதன் முதலில் வந்தது. காலஞ் சென்றவர்களின் கோஷ்டியில் சத்தியம், அஹிம்சை ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஒரு அங்கத்தினர் சொன்ன யோசனையை மற்றவர்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சத்தியமும் அஹிம்சையும் துக்கம் தெரிவிப்பதற்கு லாயக்கற்றவை என்று கருதினார்கள் போலும்.

பிறகு, கீழ் சபைக்கும் மேல் சபைக்கும் அக்கிராசன பதவிகளுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களை நியமிக்கத் தேர்தல்கள் நடந்தன. கீழ் சபைக்கு ஸ்ரீ தென்னடி விசுவநாதன் என்னும் பிரபல ஆந்திரப் பிரதிநிதியின் பெயரை, மந்திரி கே. ஆர். காரந்த் பிரேரணை செய்தார். ஸ்ரீ தென்னடி விசுவநாதன் பிரதம மந்திரி பிரகாசத்தின் வலது கை என்பது பிரசித்தமானது. மந்திரி சபை அமைப்பு சம்பந்தமாகக் காரியக் கமிட்டித் தலைவர்களின் அபிப்பிராயத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்று அவர் அறிக்கை மேல் அறிக்கை விடுத்தவர். அத்தகையவருக்குப் போட்டியாக ஹரிஜன அங்கத்தினர் ஸ்ரீ ஜே. சிவஷண்முகம் பெயரை மாஜி மந்திரி ஸ்ரீ வி. ஐ. முனுசாமிப் பிள்ளை பிரேரணை செய்தார்.

ஸ்ரீ சிவஷண்முகமும் ஸ்ரீ முனுசாமிப் பிள்ளையும் ஏப்ரல் மாதம் 28-ந் தேதி "கல்கி" இதழில் பொன் வர்ணத்தில் பதிக்கப்பட்ட 38 பேர் ஜாபிதாவில் உள்ளவர்கள்; அதாவது காரியக் கமிட்டியின் அபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டு ராஜாஜி தலைமையை ஆதரித்தவர்கள்.

பிரேரணை செய்யப்பட்ட இரு பெயர்களையும் வோட்டுக்கு விட்டபோது ஸ்ரீ டி. விசுவநாதன் அவர்களுக்கு 69 வோட்டுகளும், ஸ்ரீ சிவஷண்முகத்துக்கு 109 வோட்டுகளும் கிடைத்தன!

இந்தப் பெருமித வெற்றி தமக்கே மிக்க ஆச்சரியத்தை உண்டாக்கியதாக ஸ்ரீ சிவஷண்முகம் தெரிவித்தார்.

உண்மையில் மிகவும் ஆச்சரியமான விஷயந்தான்!

ஸ்ரீ சிவஷண்முகம் வெற்றி யடைந்ததைவிட, பிரதம மந்திரியின் வலது கை போன்ற மனிதர் — மந்திரி சபையின் சார்பாகப் பிரேரேபிக்கப்பட்ட அபேட்சகர் — தோல்வி யடைந்ததுதான் மிகவும் ஆச்சரியமான விஷயம்.

இதிலிருந்து மந்திரி சபையாருக்கும் அவர்களை அந்தப் பதவியில் அமர்த்திய பெரும்பான்மை சட்டசபை அங்கத்தினருக்கும் இதற்குள்ளேயே மனப் பொருத்தம் குறைந்து வேற்றுமை வளர்ந்திருக்கிறது என்று ஏற்படுகிறது.

இன்னொரு ஆச்சரியம்!

மேலே குறிப்பிட்ட மன வேற்றுமை அடுத்தாற்போல் மேல் சபை அக்கிராசனர் பதவிக்கு நடந்த நியமனத்திலும் வெளியாயிற்று.

இந்தப் பதவிக்கு மூன்று பெயர்கள் பிரேரேபிக்கப் பட்டன.

தஞ்சாவூர் ஸ்ரீ கே. நடராஜன் பெயரை சட்ட மந்திரி ஸ்ரீ கே. பாஷ்யம் பிரேரணை செய்தார்.

சித்தூர் ராமகிருஷ்ண ராஜுவின் பெயரைக் கல்லூரி சுப்பராவ் பிரேரேபித்தார்.

உலக பார்லிமெண்டுகள் எல்லாவற்றிலும் சாதாரணமாக ஒரு சம்பிரதாயம் உண்டு. சட்டசபை அக்கிராசனர் பதவியை ஒரு தடவை வகித்தவர் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரையே அப்பதவிக்கு மறுபடியும் நியமிப்பார்கள்.

அதை யொட்டி 'ராஜாஜி கோஷ்டி' என்று சொல்லப்படுவோரின் சார்பாக பழைய அக்கிராசனர் டாக்டர் யூ. ராமாராவின் பெயர் பிரேரேபிக்கப்பட்டது.

மூன்று பெயர்களையும் வோட்டுக்கு விட்டதில் ஸ்ரீ கே. நடராஜனுக்கு [illegible] வோட்டும், ஸ்ரீ ராமகிருஷ்ண ராஜுவுக்கு 72 வோட்டும், டாக்டர் யூ. ராமாராவுக்கு 34 வோட்டுகளும் கிடைத்தன.

ஆகவே ஸ்ரீ ராமகிருஷ்ண ராஜு வெற்றியடைந்து மேல்சபை அக்கிராசனர் ஆனார். மந்திரி சபையினால் சிபார்சு செய்யப்பட்ட அபேட்சகர் ஒரு வோட்டு வித்தியாசத்தால் தோல்வி யடைந்தார்.

ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியமான சம்பவம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்.

மேற்படி இரு ஆச்சரியங்களுக்கும் காரணம், இன்னும் பூர்த்தியாகா

இரண்டு மந்திரி பதவிகளும் பதின் மூன்று பார்லிமெண்டரி காரியதரிசி பதவிகளுந்தான் என்று ' விஷயமறிந்த வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

அதாவது மேற்படி பதவிகளை இன்னின்னாருக்குத்தான் தரவேண்டுமென்று ஒரு கோஷ்டியார் பிரதம மந்திரி பிரகாசத்தை வற்புறுத்துகிறார்களாம். அந்த கோஷ்டியின் வற்புறுத்தலுக்குப் பிரகாசம் தலைவணங்க மறுக்கிறாராம். இது காரணமாக, மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் பிளவு ஏற்பட்டிருக்கிறதாம்.

இந்தப் பிளவு காரணமாக வருங் காலத்தில் இன்னும் என்னென்ன விசித்திர சம்பவங்கள் நடைபெறப் போகின்றனவோ என்று பார்க்க வேண்டும்.

பிரகாசத்தின் கோபம்

பிரதம மந்திரி பிரகாசம் தமது அபேட்சகர் தோற்றுப் போனதினால் உண்டான கோபத்தைப் பகிரங்கமாக மறு நாள் சட்டசபைக் கூட்டத்தில் காட்டிக் கொண்டார்.

கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் ஆன பிற்பாடு, ஸ்ரீ சிவஷண்முகத்தின் பெயரைப் பிரதம மந்திரி பிரகாசம் பிரேரணை செய்திருக்கவேண்டியது முறை. அவ்விதம் அவர் செய்யவில்லை.

அக்கிராசனர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவரை மந்திரிக் கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவரும் இருபுறமும் கைலாகு கொடுத்து அழைத்துப் போய் அக்கிராசன பீடத்தில் அமர்த்துவது சம்பிரதாயம்.

ஸ்ரீ சிவஷண்முகம் எழுந்து சென்று பிரதம மந்திரியின் பக்கத்தில் நின்று பார்த்தார். ஆனால் ஸ்ரீ பிரகாசம் எழுந்திருக்கவில்லை. முஸ்லிம் லீக் அங்கத்தினரோ அச் சமயம் சட்டசபைக்குள் பிரவேசிக்கவேயில்லை.

எனவே, குமாரராஜா முத்தைய செட்டியார் முன் வந்து நிலைமையைச் சமாளிக்கும்படி நேர்ந்தது. அவர் ஸ்ரீ சிவஷண்முகத்தின் கையைப் பிடித்து அழைத்துப் போய்ப் பீடத்தில் உட்கார வைத்து விட்டுத் திரும்பி வந்தபோது அர்த்த புஷ்டியுள்ள ஒரு புன்னகையும் புரிந்தார்!

மலையை விழுங்கிவிட்டு ....

சட்ட சபையின் முதல் கூட்டத்தில் முஸ்லிம் லீக் அங்கத்தினர், காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் சம்பளத்தை உயர்த்திக் கொண்டது பற்றிச் சக்கைப் போடு போட்டார்கள்.

இம்மாதிரி தாக்குதலுக்குக் காங்கிரஸ் மந்திரிகள் இடங் கொடுத்தது வருந்தத் தக்க காரியம்.

சம்பளம் உயர்த்திக் கொண்டதற்குப் பிரதம மந்திரி பிரகாசம் கூறிய காரணம் பொருத்தமாயில்லை.

(1) காங்கிரஸ்வாதிகள் தியாகம் செய்தவர்கள்; (2) வாழ்க்கைச் செலவு உயர்ந்திருக்கிறது—என்னும் இரண்டு காரணங்களை அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் மந்திரிகளைக் காட்டிலும் எத்தனையோ அதிக தியாகம் செய்த குலசேகர பட்டினம் தியாகிகள், திருவாடானைத் தியாகிகள் முதலியோர் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஆயிரம் அணுக் கொடுப்பார் யார்?

வாழ்க்கைச் செலவு என்னதான் உயர்ந்திருந்தாலும் தியாக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட காங்கிரஸ் மந்திரிகள் மாதம் ரூ. 750-க்குள் வாழ்க்கை நடத்த முடியாதா?

கடுகு விழுங்கத் தயக்கம்

மந்திரிகளின் சம்பளத்தை உயர்த்தியதோடு பார்லிமெண்டரி காரியதரிசிகளின் சம்பளத்தையும் பழைய மந்திரிகளின் சம்பள அளவுக்கு உயர்த்தினார்கள். அதாவது ரூ. 500 சம்பளமும் ரூ. 250 அலவன்ஸும் கொடுத்தார்கள்!

இப்படிக் கொள்ளையாக அள்ளிக் கொடுத்து விட்டுச் சட்டசபை அங்கத்தினர் சம்பளத்தை ரூ. 200 ஆக்க முடியாது, ரூ. 150 அவர்களுக்குப் போதும் என்று கறாராகத் தீர்மானித்தார்கள்.

பார்க்கப்போனால், மந்திரிகளைப் போலவே பெரும்பாலான எம். எல். ஏ.க்களும் தியாகிகள்; முழு நேர தேசத் தொண்டு செய்கிறவர்கள்.

இந்தப் பஞ்ச காலத்தில் எம். எல். ஏ.க்கள் சரியானபடி தங்கள் தொகுதிகளில் வேலை செய்ய வேண்டுமானால், இடைவிடாமல் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும். அதற்கு அவர்களுக்குப் பிரயாணச் செலவு கொடுப்பதில்லை. மந்திரிகளுக்கு எங்கே போனாலும் பிரயாணச் செலவு உண்டு.

அப்படியிருக்க, எம். எல். ஏ.க்களின் சம்பளத்தை ரூ 200 ஆக்கக் கூடாதென்று முடிவு செய்தது, மலையை விழுங்கியவன் கடுகு விழுங்கத் தயங்குவதேயாகும்.



வியாசர் விருந்து வைபவம்

சாவி

சென்ற 24-5-46 வெள்ளிக்கிழமை மாலை தமிழ்ப் பண்ணைக்காரர்கள் ராஜாஜி எழுதிய வியாசர் விருந்துக்கு ஒரு எதிர் விருந்து வைத்தார்கள்!

'ட்ரோஜன்' அண்ணாமலை செட்டியாருடைய 'எவர்கிரீன்' பங்களாவில் நடைபெற்ற மேற்படி இனிய வைபவத்துக்கு மதுரை எ. வைத்தியநாதய்யர், டாக்டர் ராஜன், வி. பெருமாள்சாமி செட்டியார், டாக்டர் சுப்பராயன், வி. ஐ. முனுசாமிப் பிள்ளை, கே. பாலசுப்பிரமணிய ஐயர், மூ. அருணாசலம், கி. சந்திரசேகரன், பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை, எ. வி. ராமன், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, என். அண்ணாமலைப் பிள்ளை, ஏ. வேதரத்தினம் பிள்ளை; வெ. சாமிநாத சர்மா, கல்கி காரியாலயத்தார் முதலிய இலக்கிய ரஸிகர்களும் அரசியல் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

இத்தனை பிரமுகர்கள் விஜயம் செய்த இவ்வளவு பெரிய வைபவத்தில் ஒரே ஒரு குறைபாடு மட்டும் காணப்பட்டது. அது வியாசர் விருந்தில் கம்பர் கலந்து கொள்ளவில்லை என்பதுதான். ஸ்ரீ டி. கே. சி. அவர்களைத்தான் சொல்கிறேன். மேற்படி குறையை ராஜாஜியே தமது பிரசங்கத்தின்போது குறிப்பிட்டு விட்டார்.

"இன்று இந்த வைபவத்தில் டி. கே. சி. கலந்து கொள்ளாதது எனக்கு ஒரு பெரிய குறையாகக் காண்கிறது" என்றார்.

இந்தக் குறையை ராஜாஜியைப்போலவே அன்று அங்கு வந்திருந்தவர்களும் உணர்ந்தார்கள். டி. கே. சி. மட்டும் இருந்திருந்தால் அன்றைய தினம் "நீங்கள் பேசுங்கள் நீங்கள்தான் பேசுங்கள்!" என்று ஒருவரை ஒருவர் வேண்டிக் கொள்வதற்கும் அதற்கு ஒவ்வொருவரும் ஸாக்கு செய்து கொள்வதற்கும் இடமிருந் திருக்காதல்லவா? இருவகை விருந்துகளின் சிறப்பையும் பற்றி, வேறு யாருக்கும் இடம் வைக்காமல் டி. கே. சி. யே பேசித் தீர்த்து விட்டிருக்க மாட்டாரா?

விழா ஆரம்பத்தில் நடந்த சிற்றுண்டி விருந்து வியாசர் விருந்தைப் போலவே ரொம்பவும் சுருக்கமாகவும் கச்சிதமாகவும் அழகாகவும் அமைந்திருந்தது.

ராஜாஜி வியாசர் விருந்தை எப்படிப் பழமைக்கும் புதுமைக்கும் ஒப்பிட்டு எழுதியிருக்கிறாரோ, அதே மாதிரி சிற்றுண்டி விருந்திலும் பழமையும் புதுமையும் கலந்திருந்தன.

பழ தினுசுகளை ஒன்று சேர்த்த 'ப்ரூட் ஸாலட்,' பிஸ்கத்து இவை யிரண்டும் 'ரேஷன்' சட்டத்தின் கீழ் வராத தற்காலத்

ிய புது ஆகாரங்கள். இவை விரன் ிக்கும் பிறகு காப்பி வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றமாய்ப் போய் விட்டது. காப்பிக்குப் பதிலாகப் பழைய மோஸ்தரில் நீர் மோரைக் கொண்டு வந்து வைத்தார்கள்!

சிற்றுண்டி விருந்து முடிந்ததும் தமிழ்ப் பண்ணை சின்ன அண்ணாமலை ராஜாஜிக்கு மாலை சூட்ட எழுந்து நின்றார், ராஜாஜி அதைத் தடுத்து மாலையை வாங்கிச் சின்ன அண்ணாமலையின் கழுத்தில் போட்டதைச் சபையோர் உற்சாகத்துடன் ஆமோதித்துக் கரகோஷம் செய்தார்கள். பின்னர் சின்ன அண்ணாமலை பேசியதாவது:

"ராஜாஜி அவர்களின் வியாசர் விருந்தை வெளியிடும் மகத்தான பாக்கியம் எனக்கு வாய்த்தது பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். காரணம், சாதாரணமாக ஒருவன் எவ்வளவுதான் பணம் காசு சம்பாதித்த போதிலும் அது வெகு காலம் வரை நீடிப்பதில்லை. அவனுடைய பெயரும் மூன்று தலை முறைகளுக்கு மேல் நிலைப்பதில்லை. ஆனால் வருங்காலச் சந்ததிகள் ராஜாஜி அவர்களின் 'வியாசர் விருந்து' புஸ்தகத்தைப் படிக்கும்போதெல்லாம் அதில் என்னுடைய பெயரும் இருப்பதைக் காண்பார்கள். இதனால் என்னுடைய பெயர் சிரஞ்சீவித்துவம் வாய்ந்ததாகி விட்டது. ஆகையால் நான் பாக்கியசாலி!" என்று சொல்லி ஒரு வெள்ளித் தட்டில் பழம் புஷ்பம் வெற்றிலை பாக்கு இவைகளுக்கிடையே வியாசர் விருந்து புஸ்தகங்களை வைத்து பக்தியுடனும் மரியாதையுடனும் ராஜாஜியிடம் சமர்ப்பித்தார்.

பிறகு, ஸ்ரீ மு. அருணாசலம், திரிகூட சுந்தரம் பிள்ளை, வி. ஐ. முனுசாமிப் பிள்ளை ஆகியவர்கள் மகா பாரதக் கதைகளை ராஜாஜி எழுதியுள்ள முறையைப் புகழ்ந்தும் பாராட்டியும் பேசினார்கள்.

கடைசியில் ராஜாஜி எழுந்து, தாம் வியாசர் விருந்து' எழுத ஆரம்பித்துப் பூர்த்தி செய்த வரலாற்றைக் கூறினார்.

"மனதுக்குச் சாந்தியில்லாதபோது சிலர் பந்தாட்டம், சீட்டாட்டம், 'காரம்' விளையாட்டு இவற்றில் பொழுதைப் போக்குவார்கள். நானோ என்னுடைய மனதுக்குச் சாந்தியில்லாத சமயங்களில் பாரதக் கதைகளைப் படித்துச் சாந்தி செய்து கொள்வேன். அம்மாதிரி சமயங்களில் நான் படித்தவற்றையே என்னுடைய அறிவுக்கு எட்டிய முறையில் சுருக்கி எழுதியிருக்கிறேன்.

"முதன் முதலாகக் கல்கி ஆசிரியரின் தூண்டுதலின் பேரிலேயே இந்த மகா பாரதக் கதைகளை எழுத ஆரம்பித்தேன். பிறகு கல்கி பத்திரிகையில் இரண்டரை வருஷ காலம் தொடர்ந்து எழுதி வந்தேன். அந்தக் கதைகளே இப்போது தமிழ்ப் பண்ணையில் புத்தக ரூபமாக வெளிவந்திருக்கிறது. எப்படி கங்காதேவி தனக்குப் பிறந்த எட்டாவது குழந்தையாகிய பீஷ்மரைக் கொஞ்ச காலம் வளர்த்துப் பிறகு சந்தனு மகாராஜாவிடம் ஒப்படைத்தாரோ அம்மாதிரி கல்கி ஆசிரியர் தமது பத்திரிகையில் இரண்டரை வருஷ காலமாக வளர்த்து வந்த வியாசர் விருந்து குழந்தையை இன்று தமிழ்ப்பண்ணை சந்தனுவிடம் ஒப்படைத்து விட்டார்!" என்று கூறியபோது சபையில் பலத்த கரகோஷம் எழும்பியது.

"இதை எல்லோரும் எக்காலத்திலும் படித்துப் பயன் பெற வேண்டும் என்பதற்காகப் புத்தக ரூபமாக வெளியிட வேண்டும் என்று எண்ணினேன். அப்படி எண்ணியபோது முதலில் தமிழ்ப்பண்ணை அண்ணாமலையின் ஞாபகமே வந்தது. தமிழ் நாட்டில் அழகாகப் புஸ்தகம் போடுவதில் தமிழ்ப்பண்ணைக்காரர்கள் மேனாட்டுப் பிரசுரகர்த்தர்களை மிஞ்சி விட்டார்கள். இதோ எனக்கு எதிரில் வைக்கப்பட்டிருக்கும் அழகிய புஸ்தகங்களைக் கண்டு பிரமிப்படைகிறேன். அன்று இந்திரப் பிரஸ்தத்தில் துரியோதனன் தரைக்கும் ஜலத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் தடுமாறியது போல் இன்று எனக்கும் ஒரே கலவரமாயிருக்கிறது. இந்த வீட்டின் அழகிய தரை, புஷ்ப மாலை, வெள்ளித் தட்டு, வெற்றிலை, கண்ணைக் கவரும் புஸ்தகம் இவைகளுக்கிடையே ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாமல் ஒரே குழப்பமாயிருக்கிறது" என்றார்.

விழா நடந்த இடத்தில் தமிழ்ப்பண்ணைக்காரர்கள் கண்காட்சியாக வியாசர் விருந்து முதலிய புத்தகங்களை ஒரு நீண்ட மேஜையின்மீது வரிசையாக அடுக்கிவைத்திருந்த அழகைப் பார்த்தபோது ராஜாஜி கூறியது எவ்வளவு உண்மை என்பது புலப்பட்டது. விருந்துக்கு வந்திருந்த பிரமுகர்களில் பலர் கண்ணைக் கவரும் மேற்படி வியாசர் விருந்து புத்தகங்களின் அமைப்பையும் 'செட்-அப்' விசேஷத்தையும் கண்டு ஆவலுடன் தலைக்கு ஒரு புத்தகத்தைப் பணம் கொடுத்து வாங்கி வைத்துக்கொண்டார்கள்.

பின்னர், சின்ன அண்ணாமலை வந்திருந்தவர்களுக்கும் ராஜாஜிக்கும் வந்தனோபசாரம் கூற, வைபவம் இனிது முடிந்தது.

காவேரியின் காதல்

எஸ். என். ராமகிருஷ்ணன்



ஈரோடு பாஸஞ்சர் கட்டை வண்டியைப்போல் லொடக் லொடக் கென்று ஊர்ந்து கொண்டிருந்தது. நல்ல வெய்யில் வேளை யாகையால் எனக்குக் கடுமையான நித்திரை மயக்கம். விவரிக்க முடியாத ஒரு வகைக் கனவு உலகில் ஊசலாடிக் கொண்டிருந்த என் செவிகளில் இனிமையான குரலொன்று மெல்ல வந்து மோதியது. கண்ணைத் திறந்தேன்; எதிரே ஒரு பிச்சைக்காரி பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய அழகையும் அமுத கானத்தையும்தான் என்னவென்று சொல்வேன்!

"வரவர இந்தப் பக்கத்து ரயில்களில் மூட்டைப் பூச்சியை விடப் பாழும் பிச்சைக்காரிகள்தான் அதிகம் போலிருக்கிறது!" என்ற சொற்கள் என் காதில் விழுந்தன. ஆனால், இதை ஒருவரும் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. பிச்சைக்காரியின் கம்பீர நாதம் தடையில்லாமல் பிரவாகித்துக் கொண்டேயிருந்தது. சில வினாடிகள் கழிந்த பின் மறுபடியும் அந்தப் பழைய பேர்வழி என் கவனத்தைக் கவர்ந்தார்.

"ஆளைப் பார், பாஞ்சாலியைப் போல் ஐந்து பேருக்குப் பெண்சாதியாய் இருப்பாள் போலிருக்கிறது!"

இந்தச் சொற்கள் என்னுடைய உள்ளத்தில் மட்டுமல்ல, அவளுடைய உள்ளத்திலும் கூடச் சுருக்கென்று பாய்ந்திருக்க வேண்டும். இல்லா விட்டால் அவள் பாடுவதை நிறுத்தி யிருப்பாளா?

"என் ஐயா, என்னை என்னவென்று நினைச்சே?"

"நினைக்கிறதென்ன? உன் மூஞ்சியே தான் சொல்லுதே!" என்று ஒரு போடு போட்டார் அவர். வண்டிக்குள்ளிருந்த எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

"கண்ணிருக்கா ஐயா, உனக்கு? நல்லாப் பார்த்துப் பேசு; பிச்சைக்காரின்னு மானமும் விட்டவன்னு நினைச்சுக்கிட்டிருக்கே? உம்மாதிரி மானங்கெட்ட மனுசனோடே காசும் சரி, இந்த மண்ணுஞ் சரி!" என்று அவள் ஆத்திரத்துடன் தன் கையிலிருந்த காசுகளை யெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு வீசி யெறிந்தாள்.

பணத்திமிர் பிடித்த யாரோ ஒரு மனிதன் செய்த அநீதி ஓர் ஏழைப் பெண்ணின் ஒரு நாள் உழைப்பை அப்படியே விழுங்கி விட்டதை என்னால் சகிக்கவே முடியவில்லை.

"ஏன், அம்மா! அந்த மனிதர்தான் ஏதோ யோசனையில்லாமல் சொல்லிவிட்டா ரென்றால் நீயும் இப்படிக் கோபித்துக்

சொல்லலாமா?" என்று கேட்டேன். அவன் ஒரு பதிலும் கூறவில்லை. நிமிர்ந்து ஒரு விநாடி என்னை உற்றுப் பார்த்தான். அதற்குள் அந்த நயனங்கள் என்னுள் ஊடுருவிப் பாய்ந்து என்னென்ன வேல்[illegible]மோ செய்து விட்டன.



"அதைப் பத்தி உனக்கென்ன கவலை, சாமி?" என்று கேட்டான்.

"இதோ பார், உன்னைப் போன்றவர்கள் பட்டினி கிடப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்!" என்று சொல்லி ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினேன்.

அவன் கோட்டின் மேல் அலட்சியமாகத் தன் பார்வையைச் செலுத்திய வண்ணம், "இது என்னுத்துக்கு சாமி? காசு கெடைச்சா வரும், போகும்! ஒரு பேச்சு சொல்லிவிட்டா அப்புறம் மாறுமா? அது என்ன அந்த மனுசனுக்கு அவ்வளவு திமிரு?" என்றான் முகத்தில் அறைந்தாற் போல்.

பதில் பேச எனக்கு நா எழவில்லை.

அடுத்த கணம் அந்த ஓடும் ரயிலில் பட்டுப் பூச்சியைப்போல் அவன் அடுத்த பெட்டிக்குப் பறந்து போய்விட்டான்.

2

இப்பொழுதெல்லாம் ஊரில் எனக்குப் பொழுது போவதே அவ்வளவு சிரமமாகத் தோன்றவில்லை. பொழுது போகாத வேளைகளில் மனதின் ஏடுகளைத் தலை கீழாய்த் திருப்பிப் பழைய பிச்சைக்காரியின் படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதே என் வழக்கமாகிவிட்டது.

இந்த நிலைமையில் திடீரென்று ஒருநாள் என் கல்யாணப் பிரச்னை கிளம்பியது. விவாக ஏற்பாடுகளெல்லாம் துரிதமாக நடைபெற்றன. இவ்வளவு சீக்கிரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று யார் அழுதார்கள்? நினைக்க நினைக்க என் நெஞ்சில் ஆத்திரம் குமுறியது. அந்த வேகத்தைத் தாங்க முடியாமல் உலாவி விட்டு வர ஆற்றங்கரைக்கு ஓடினேன்.

காவேரி நதிக்கு அன்று ஒரே குதூகலம் போலிருக்கிறது. இயற்கை அன்னைதான் அன்று எவ்வளவு லாவண்யத்துடன் பிரகாசித்துக் கொண்டிருந்தாள்!

இதை யெல்லாம் இங்கே யார் கவனிக்கிறார்கள்? இருபது வயதிற்குள் கல்யாணமென்று கனவு உலகத்தில் சிக்கவைக்கப் பார்க்கும் தாய்ப்பாசமல்லவா இப்பொழுது என் உள்ளத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறது?

புயல் கிளம்பிவிட்டால் மனதில் பழைய எண்ணங்கள் புகாமலா இருக்கும்? ஆகவே என் நினைவில், அன்று ரயில் வண்டியில் பாட்டுப் பாடிப் பிச்சை யெடுத்த அந்தப் பெண்ணின் உருவம் மின்னலைப் போல் பளிச்சென்று மின்னியது. இந்த மானசீகக் காட்சியில் மூழ்கிப் போய்ப் பிரமை பிடித்தவனைப் போல் நடந்து கொண்டேயிருந்தேன். காற்றோடு காற்றாய் மிதந்து வந்த ஒரு பழகிய குரல் என் காதுகளில் விழுந்தது. அங்கேயே நின்று சற்று உற்றுக் கவனித்தேன். சந்தேகமென்ன? அது அவள் குரலேதான்!

ஆற்றோரத்தில் பசுமைப் பாதையை அடுத்திருந்த ஒரு மாந்தோப்பி லிருந்துதான் அந்தக் குரல் கேட்டது. விவரிக்க முடியாத ஏதோ ஒரு சக்தி என்னை அங்கே 'போ, போ!' வென்று பிடித்துத் தள்ளவே, மெதுவாகக் கீழே இறங்கித் தோப்பிற்

குள் நுழைந்தேன். ஜலக்கரையில் ஒரு பாறையும், அதன் மேல் ஒரு மனித உருவமும் என் கண்களில் பட்டன. இன்னும் சற்று அருகே சென்றவுடன், அந்தப் பிச்சைக்காரியின் பாட்டுத் தான் எனக்கு அடையாளம் காட்டிக் கொடுத்தது. இலைச் சருகுகளின் ஓசை கேட்டு அவளும் பாடுவதை நிறுத்தி விட்டு நானிருந்த பக்கம் திரும்பினாள். என் முகத்தைப் பார்த்தவுடன் "நீங்களா சாமி, வாங்க!" என்று வரவேற்புக் கூறினாள்.

சூரியன் சமயம் பார்த்து அஸ்தமிக்கத் தொடங்கினான். அன்றைக்கு நாங்கள் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலேயே பேசிக் கொண்டிருந்தோம். அவள், தான் பிறந்து வளர்ந்து பிச்சைக்காரியான கதையையெல்லாம் அன்று சொல்லித் தீர்த்தாள். பாழும் கடவுள் அவளை எடுத்த எடுப்பிலேயே ஒரு அநாதையாகப் பிறப்பித்து விட்டானாம். தன்னைப் பெற்றவர்கள் யாரென்று தெரிந்து கொள்ளும் பாக்கியம் கூட அவளுக்குக் கிடைக்கவில்லையாம். குழந்தையிலேயே கேட்பாரற்று யார் வீட்டுத் திண்ணையிலேயோ கிடந்த அவளை ஒரு பிச்சைக்காரன் கண்டெடுத்து இதுவரை வளர்த்து வந்தானாம். ஓடிக்கொண்டிருக்கும் ரயிலில் ஒரு வண்டியிலிருந்து இன்னொரு வண்டிக்குத் தாவுவதற்கும், தொண்டை கிழியும் குரலில் பாட்டுப் பாடிச் சண்டித்தனம் செய்வதற்கும், காசு கொடுக்காதவர்களை முறைத்துப் பார்த்து முணுமுணுப்பதற்கும் அவளுக்கு அவன் தான் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும். காவேரி என்பது அவள் பெயராம். இவ்வளவு காலமாக அவளை வளர்த்து வந்தவனுடைய சிநேகிதன் ஒருவன் கள்ளுக்கடை வைத்திருக்கிறானாம். அவனுக்கு அவளைக் கட்டிக் கொடுக்கப் போவதாக அவளுடைய வளர்ப்புத் தந்தை போன வாரம்தான் சொன்னானாம். இவள் முடியாதென்றாளாம். இரண்டு பேரும் பிரமாதமாகச் சண்டை பிடித்துக் கொண்டார்களாம். அன்றைக்கு இரவே அவள் அந்த ஊரைவிட்டுச் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி வந்து விட்டாளாம்.

அவளுடைய கச்சிதமான பேச்சும் களங்கமற்ற முகமும் என்னை விவரிக்க முடியாத உணர்ச்சிக் கடலில் ஆழ்த்திவிட்டன.

அன்று முதல் ஒவ்வொரு மாலையும் அவளைச் சந்தித்துப் பேசுவதென்பது என்னுடைய தினசரி நடவடிக்கைகளில் முதல் ஸ்தானம் வகிக்கும் விஷயமாகி விட்டது. அதற்கேற்றாற் போல் அவளும் இப்பொழுது பிச்சைக்காரியிலிருந்து வேலைக்காரி என்ற பதவிக்குத் தன்னைத் தானாகவே உயர்த்திக் கொண்டாள்.

இவ்வளவுக்கும் காரணம் என்னைப் போலவே அவளுடைய அன்பு கனிந்த சொற்களில் நம்பிக்கை கொண்ட ஊரைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் அவளைத் தங்கள் வீட்டில் வேலை செய்ய நியமித்துக் கொண்டது தான். அவர்களில் சற்றுத் தாராளமான மனமுடைய ஒரு மனிதர், காவேரிக் கரையிலிருந்த தம்முடைய மாந்தோப்பில் ஒரு சிறு குடிசை போட்டுக் கொண்டு வசிக்க அவளுக்கு அனுமதியும் கொடுத்து விட்டார்.

3

நாளடைவில் அவளுடைய பேச்சும் நடவடிக்கையும் ஒரு விதமாக மாறிக் கொண்டே வந்தது. அன்றைக்கு அந்த ரயிலில் அவள் முகத்தில் காணப்பட்ட கம்பீரமும் குறுகுறுப்பும் குன்றிப் போய் இப்பொழுது அதில் ஒருவகை சாந்தமும் அமைதியும் பிரகாசித்தது. காவேரியைத் தேடிக்கொண்டு ஒரு நாள் சாயங்காலம் அவள் குடிசைக்குச் சென்றேன்.

"வாங்க சாமி, வாங்க!" என்று சொல்லிக் கொண்டே காவேரி வெளியே யார் என்று அறிந்து கொள்ளும் பொருட்டுக் கீற்றுச் சுவரின் இடுக்கு வழியாகத் தன் பார்வையைச் செலுத்தினாள்.

"ஐயோ, சாமி! நான் இருக்கிற இடத்தை எங்க அப்பன் எப்படியோ கண்டு பிடிச்சுட்டானே!" என்று அவள் குரல் படபடத்தது. நானும் இரண்டு கீற்றுகளை விலக்கி வெளியே பார்த்தேன். படுகைப் பாதையில் ஒரு முரட்டு மீசைக்காரன் நின்று கொண்டிருந்தான்.

மறு விநாடியே வெளியே வந்து குடிசைக்குப் பக்கத்திலிருந்த வேலியைத் தாண்டிக் குதித்து, அடுத்த தோப்பின் வழியாக மீசைக்காரனுக்குச் சுமார் நூறு கஜங்களுக்கப்பால் பாதையைப் பிடித்து, ஒரு வழியாக வீடு வந்து சேருவதற்குள் எனக்கு எமன் உலகத்திற்கே போய் விட்டு வந்ததைப் போலாகிவிட்டது. ஓடிவந்த களைப்பினால் உடம்பு முழுவதும் வியர்வை பெருகியது. சுவரில் தொங்கிய கெடிகாரத்தின் முட்கள் மணி ஏழு என்பதைக் காட்டின. ஈஸிசேரில் சாய்ந்தபடி சிந்தனைக் கடலில் எவ்வளவு நேரம் நீந்திக்கொண்டிருந்தேனோ தெரியவில்லை. அறையின்

கதவை யாரோ தடதட வென்று தட்டி எனக்கு நினைவு மூட்டி விட்டார்கள். எழுந்து போய்க் கதவைத் திறந்தேன். வேறு யாருமில்லை; சமையற்காரன் தான்!

“வாசல்லே யாரோ ஒரு பொம்மனாட்டி வந்திருக்கா; உங்களை அவசியம் பார்க்கணுங்கறா!” என்று அவன் கூறியதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. “கோவிலிலிருந்து அம்மா வந்தாய் விட்டதா?” என்றேன். “இல்லை” என்றான். அதற்குள் மாடிப் படிகளில் யாரோ ஏறி வரும் சத்தம் கேட்கவே என் நெஞ்சு திக்திக் கென்று அடித்துக் கொண்டது. ஆனால் என்ன ஆச்சரியம்? என் காவேரி யல்லவா உள்ளே நுழைகிறாள்!

“நல்ல வேளையாப் போச்சு! எங்க அம்மா இருக்கும் சமயத்தில் வராமற் போனாயே?” என்று வினவியவாறே காவேரிக் கெதிரில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டேன். ஆனால் அதில் அவள் உட்கார வில்லை. என்னைப் பார்த்து முத்து முத்தாய்க் கண்ணீரைச் சொரிந்து கொண்டே யிருந்தாள்.

“ஏன் அழுகிறாய், காவேரி? என்ன நடந்தது, சொல்லு. உங்க அப்பன் வந்தானே, போய் விட்டானா?”

“போறதேதுங்க? என்னாலே முடிஞ்ச அளவு சொல்லிப் பார்த்துட்டேன். என் பொணத்தையாவது இழுத்துக்கிட்டுத்தான் போவானாம்!”

“இப்போ எங்கே இருக்கான் அவன்?”

“என் கூடவே வந்திருக்கான், சாமி! வாசல்லே நின்னுகிட்டிருக்கான். வேலை செஞ்ச ஊட்டிலே சம்பள பாக்கி வாங்கி வரேன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்.”

“இதென்ன அக்கிரமமாய் இருக்கு? உனக்கு இஷ்டமில்லாமலே இருக்கிறபோது, உன்னைக் கூட்டிக் கொண்டு போய் என்ன பண்ணப் போறானாம்?”

“என்ன செய்வான்? அந்தக் கள்ளுக் கடைக்காரன் காலிலே தள்ளிட்டு காசு காசா சம்பாதிச்சுக்குவான். நிஜமாச் சொல்றேன், சாமி! இந்த ஊருக்கு நான் வந்ததுக்குக் காரணமே உங்க மேலே ஏற்பட்ட பிரியம்தான், சாமி! ஆனால், அது எவ்வளவு முட்டாள்தனம்னு நான் இப்போதான் சாமி, தெரிஞ்சுக்கிட்டேன். இந்தப் பிச்சைக்காரக் கழுதைக்கு இதுக்கெல்லாம் யோக்கியதை ஏதுங்க?”

இந்தச் சமயத்தில் வெளி வராந்தாவிலிருந்து ஒரு குரல், “ஏ, குட்டி! வா, சட்டுன்னு; பொழுதேறலே?” என்று மழைக் காலத்து மண்டூகம் போல் இரைந்தது.

ஏதோ ஒரு உணர்ச்சி என் நெஞ்சில் சிக்கிக் கொண்டு என் வாயை அடைத்தது. அதைச் சமாளிப்பதற்குள் காவேரி தானாகவே கதவைத் திறந்து கொண்டு வெளியே போய் விட்டாள்.

காதற் கோவிலின் கர்ப்பக் கிரஹத்தில் அன்று எத்தனையோ இளம் காதலர்கள் மாலை மாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் என் காவேரிக்கு மட்டும் அந்தப் பாக்கியம் கிட்டவில்லை. மதமும் பணமும் மனிதர்களுக்குள்ள வேற்றுமையை ஒழித்து, அந்தஸ்து என்ற சொல்லிற்கு அர்த்தமே இல்லாமல் செய்ய எனக்கு எங்கிருந்து சக்தி வரும்?

பிச்சைக்காரி காவேரி! பாவம், ஒரு பேதை! இனிமேல் அவள் முன்போல் பழைய பிச்சைக்காரியாகிவிட வேண்டியது தான். வெறுப்புடன் வீட்டை விட்டுக் கிளம்பிக் காவேரிக் கரைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

வழக்கத்திற்கு மாறாக அன்று நதிக்கரை சலனமற்றிருந்தது. குளிர்ச்சியாக வீசும் தென்றலுக்கு மட்டும் ஒரு அலாதி சக்தி இருக்கும்போலும்! நான் என்ன சொல்லியும் கேட்காமல் அது என்னை அந்தப் பிச்சைக்காரியின் குடிசைப் பக்கமே இழுத்துச் சென்றது.

அப்போது குடிசைக்குள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தபடியால், கீழே ஒரு மனிதன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதையும், காவேரி பரிமாறிக் கொண்டிருப்பதையும் இடுக்கு வழியாய் என்னால் பார்க்க முடிந்தது. கிழவன், சோற்றை வாரிக் கவளம் கவளமாய் அடைத்துக் கொண்டே ஏதேதோ உளறிக் கொண்டே யிருந்தான். அவன் கூறிய தொன்றும் எனக்குச் சரியாக விளங்க வில்லை. சுமார் கால்மணி நேரம் நின்றிருப்பேன். திடீரென்று காவேரியின் குரல் உட்புறத்தில் கணீரென்று ஒலித்தது.

“நானும் பார்த்துக்கிட்டே யிருக்கேன்; எதுக்காக என் பிராணனை இப்படி வாங்கறே? அந்தக் கள்ளுக் கடைக்காரனை நான் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேன். தெரிஞ்சுதா?”

“என்ன திமிரு உனக்கு? நீ மட்டும் அவனைக் கட்டிக்காமே இரு, உன் கழுத்தைத் திருகி ஆத்திலே போட்டுடறேன்!”

“நீ என்ன, அப்படிச் செய்யறது? இதோ நானே போய் ஆத்திலே விழுந்துடறேன், பார்!”

இந்தச் சொற்கள் என் காதுகளில் விழுந்ததுதான் தாமதம். குடிசையின் கதவு படாரென்று திறந்தது. உள்ளேயிருந்து ஒரு உருவம் ஓடி வந்து இருட்டில் மறைந்தது. மறு விநாடியே தடாலென்று யாரோ தண்ணீரில் குதித்த சத்தம் கேட்டது. என்னுடைய வியப்பு ஒருவாறு அடங்கி முன்னே ஒரு அடி எடுத்து வைப்பதற்குள், மற்றொரு உருவமும் உள்ளேயிருந்து ஓடிவந்து, கண் மூடித் திறக்கும் நேரத்திற்குள் நீரில் பாய்ந்தது!

நானும் மளமளவென்று குடிசைக்குள் புகுந்து, அங்கிருந்த விளக்கை எடுத்துக் கொண்டு படித்துறைக்கு ஓடினேன்.

சில நிமிஷங்களில் நீருக்குள்ளிருந்து ஒரு உருவம், மற்றொன்றைத் தன் தோள்களில் சுமந்து கொண்டு மெல்ல மெல்ல மேலே கிளம்பியது. அந்தக் காட்சியைப் பார்த்தவுடன் என் இருதயம் அடித்த அடிப்பை இங்கெப்படி எழுதுவேன்?

"ஒரு நிமிசம் ஏமாந்துட்டேனுங்க! சும்மாப் பயமுறுத்தறான்னு நினைச்சதுக்கு, நிஜமாவே விழுந்துட்டாளுங்க!" என்று அழமாட்டாத குறையாய், அப்பொழுது தான் கரையேறிய கிழவன் அலறிக் கொண்டே அவன் தோள்களில் துவண்ட காவேரியின் உடலைத் தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு பம்பரம்போல் சுற்றினான். அவள் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் குடம் குடமாய்த் தண்ணீர் கொட்டியது. பிறகு அவளைக் கீழே கிடத்திவிட்டு, "கொஞ்சம் பார்த்துக்குங்க; ஓடிப் போய் ஒரு சோடா வாங்கியாந்துடறேன்" என்று சொல்லியவாறே அங்கிருந்து நழுவினான் கிழவன். எனக்கோ என்ன செய்வதென்றே ஒன்றும் புரியவில்லை.

காலதேவனின் ஊழித் தாண்டவத்தில் சிக்கிப் போய்ப் பூதகணங்கள் தலைவிரித்தாடுவதைப் போல், வானளாவிய மரங்களெல்லாம் அங்கே வீசிய சண்டமாருதத்தில் சிக்கிக் கொண்டு அகோரமாய் ஊசலாடிக் கொண்டிருந்தன. தரையில் கிடந்த காவேரிக்கு முன் நான் மண்டியிட்டு உட்கார்ந்து அவளையே கவனித்துக் கொண்டிருந்தேன். சுமார் பத்து நிமிடங்கள் கழிந்த பின்தான் அவள் கை கால்களை அசைக்க ஆரம்பித்தாள். அப்பொழுதுதான் மேகப் படலத்திலிருந்து வெளிப்பட்ட சந்திரிகையின் கிரணங்கள் அவள் முகத்தில் தவழ்ந்தன. அதே சமயத்தில் அவளுடைய கமலக் கண்களும் மெல்ல விரிந்தன.

உணர்ச்சிப் பெருக்கால் நான் "காவேரி!" என்று கூவிவிட்டேன்.

"யாரு? எ...எ...என் சாமியா?"

"ஆமாம், காவேரி! உன் சாமியேதான்! இன்னும் கொஞ்ச நேரம் பேசாம இரு; அப்புறம் எல்லாம் பேசிக்கலாம்!"

"நல்லாச் சொன்னீங்க, நீங்க! இந்தப் பாழும் பூமியிலே இனிமே நான் இருக்கான்னு உங்களோடே பேசறதுக்கு? இந்த உசிருதான் இன்னும் கொஞ்ச நாழியிலே பிரிந்துவிடப் போகிறதே!"

"காவேரி, கன்னு பின்னு என்று உளறாதே! எல்லாம் சரியாய்ப் போய்விடும்!"

அவள் அதை லட்சியம் செய்யவில்லை. "ஒரே ஒரு வரம் கேட்கிறேன்; தரீங்களா, சாமி?" என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

"ஒன்றென்ன, ஆயிரம் வேண்டுமானாலும் தரேன். இப்போ மட்டும் கொஞ்சம் பேசாமல் இரேன்!" என்றேன் நான்.

ஆனால் இதென்ன, எதற்காக இவள் இப்படி எழுந்திருக்கிறாள்? ஒரு வேளை வெறி பிடித்து விட்டதோ?

காவேரி தன் கால்களை நீட்டி ஆர்வத்துடன் என் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். வியப்பினால் சிறிது நேரம் நான் திகைத்துப் போனேன்.

பின்னால் காலடிச் சத்தம் கேட்டது.

வெட்டுண்ட கட்டைபோல் காவேரியின் உடல் பொத்தென்று கீழே விழுவதற்கும், சோடா வாங்கச் சென்றவன் இரைக்க இரைக்க ஓடி வருவதற்கும் சரியாயிருந்தது.



ஓட்டல் தொழிலாளிகள் (ஸ்டிரைக் செய்துவிட்டு வெளியே வந்து):—இன்றைக்கு நாம் எங்கே டிபன் சாப்பிடுவது?

காலக்ஷேபம்

ஜெயிலிலே!

மாஜிஸ்ட்ரேட்:—நீ இதற்குமுன் கோர்ட்டுக் கேறி எத்தனை வருடங்கள் ஆகின்றன?

குற்றவாளி:—மூனு வருஷம் ஆகுதுங்க!

மாஜிஸ்ட்ரேட்:—மூன்று வருஷ காலமாக என்ன செய்து கொண்டிருந்தாய்?

குற்றவாளி:—ஜெயில்லே இருந்தேனுங்க!

—பீ. சுப்பிரமணியம்.

★

சீக்கிரம் போக வழி

வண்டியிலிருப்பவர்:—வண்டியை மெதுவாக ஓட்டப்பா; இவ்வளவு வேகமாக ஓட்டு கிறாயே?

வண்டிக்காரன்:—ஆஸ்பத்திரிக்குச் சீக்கிரம் போகச் சொன்னீங்களே; அதுக்காகத்தான்.

—கோவை பத்மநாபன்.

★

விலை அதிகம்

பட்டிக்காட்டான்:—இந்தப் பல் பொடி என்னப்பா விலை?

கடைக்காரன்:—டப்பா நாலணா.

பட்டிக்காட்டான்:—அடேயப்பா, டப்பாவே நாலணான்னா, பல் பொடி ரொம்ப விலையாகும் போலேயிருக்கே! —ஆர். நாராயணசாமி.

★

நியாயந்தான்!

மாஜிஸ்ட்ரேட்:—வாதியை நீ கண்டபடி வெல்லாம் திட்டிவிட்டுக் கன்னத்திலும் அறைந்தாயாமே, அது எதற்காக?

எதிரி:—அவருக்குக் காது கொஞ்சம் செவிடு!

—ஜே. சுந்தரம்.

★

குற்றமில்லை!

தகப்பனர்:—நாவல் பழம் சாப்பிடக் கூடா தென்று சொல்லி யிருக்கேனே, யார் சாப்பிட்டது?

பையன்:—தான் இருக்காது அப்பா! நான் கொட்டைகளை எல்லாம் விழுங்கிவிட்டேன்.

—த. திருவேங்கடன்.

★

யார் வருவார்?

உபாத்தியாயர்:—இத்தனை நேரம் இந்த 'ட்யூஷன்' பையன்களிடம் முட்டிக் கொண்ட தில் போதும் போதுமென்றாகிவிட்டது. அறி வும் வடிகட்டின மண்டுக்கள்தான் நம்மிடம் வந்து சேருகிறார்கள்!

நண்பர்:—ஆமாம் ஆமாம்; புத்திசாலிகளா யிருந்தால் நம்மிடம் ஏன் ஸார் வருகிறார்கள்!

—என். வி. துரைசாமி.

புத்திசாலி

யஜமானி:—என்னடி செய்கிறது, குழந் தைக்கு ஜுரம் அடிக்கிறதே! காலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டினேனே அதனால்தான் ஜுரம் வந்துவிட்டது என்று அவர் சத்தம் போடுவாரே!

வேலைக்காரி:—இதுக்குத்தானு அம்மா கவலைப்படறீங்க! ஐயா கேட்டாங்கன்னு எண்ணெய் தேய்க்கு முன்பே ஜுரம் வந்து விட்டதுன்னு சொல்லிப்பிடுங்க!

—என். வி. டி.

★

நீ 'அவுட்!'

ஒரு பைத்தியம் தெருவில் போய்க் கொண் டிருக்கும் ஒருவனைத் துரத்த ஆரம்பித்தது. உடனே அவன் ஓட ஆரம்பித்தான். பைத்தியமும் பின்னால் ஓடிற்று. கடைசியில் அந்த மனிதன் இரைப்பு தாங்க முடியாமல் ஒரு இடத்தில் பயத்துடன் நின்றான். பைத்தியம் அங்கு ஓடிவந்து அவனைத் தொட்டுவிட்டு, "நீ அவுட், என்னைப் பிடி!" என்று சொல்லி விட்டுத் திரும்பி ஓட ஆரம்பித்தது. —கே. ராமச்சந்திரன்.

★

இன்னும் ஒரு 'சான்ஸ்!'

ஒருவர்:—ஸார், நம்ம டிரைவர் பிரயோசன மற்றவன். இவனைத் தொலைத்து முழுகனும். இரண்டு தடவை என்னைக் கொல்லப் பார்த்தான்!

நண்பர்:—போனால் போறது, ஸார்! இன் னும் ஒரு 'சான்ஸ்' கொடுத்துப் பாருங்களேன்!

—என். விசுவநாதன்.

★

தூங்காத குழந்தை!

புருஷன்:—இங்கே பார்த்தாயா? இரவில் மூன்று மணி நேரம் தூங்கினால் போதும் என்று இப்பத்திரிகையில் போட்டிருக்கிறது.



மனைவி:—அது நம்ம பக்கத்தாத்து குழந் தைக்கு எப்படித் தெரிந்ததோ!

—என். மோஹன்ராம்.



பரம்பரையாக அழகைக் காப்பாற்றுதல்

[illegible]

[illegible]



பியர்ஸ் சோப்

L. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

வானசஞ்சாரம்

இசைத்தேனீ

திருச்சியில் 9ஆ பல்லடம் சஞ்சீவி ராவின் வேணு கானம் நடந்தது. இக்காலத்தில் திறமையுடன் குழலைக் கையாளும் இளம் வித்வான்கள் பலரிருப்பினும், ரஞ்சகத்துடன் காதை நிரப்பும் நாதப்பொழிவும், ராகங்களைச் சிதைவுறாமல் அழகு வடிவங்களாய் வழங்கும் பழுத்த அனுபவமும் கொண்டவர் ஸ்ரீ சஞ்சீவி ராவ் அவர்களே. கேதாரம், தேவமனோஹரி, தோடி ராகங்களுக்குப்பின் நாட்டக் குறிஞ்சியை விஸ்தாரமாயும் கீழ் மேல்ஸ்தாயி வேலைப்பாடுகளுடனும் வண்ணமாய் வழங்கினார். அதில் பல்லவியை ராகமாலிகையாய் அமைத்துத் தம் திறமை முழுவதையும் காட்டினார்.

10ஆ. காலை திருச்சி வாத்திய கோஷ்டி கவனிக்கத் தக்கதா யிருந்தது. ஒருவர் வேணு கானத்தில் கருக்கமான கலாநிதி ராக ஆலாபனையுடன் 'சின்ன நாட்டெனு' கிருதியின் முதல் அடியை வாசிக்க, அதன்பின் வீணை, வயலின், மிருதங்கம் முதலிய பக்க வாத்தியங்கள் தொடர்ந்து சேர்ந்து கோஷித்தன. அதேபோல், ரீதிகௌளை ராகத்தோடு 'ஜனனி' கிருதியை வாசிப்பதில் வீணை தலைமை வகிக்க, மற்ற வாத்தியங்கள் பின் தொடர்ந்தன.

அன்று சென்னையில் வீணை வாசித்த தேவகோட்டை நாராயணய்யங்கார் அவ் வாத்தியத்தில் கைதேர்ந்தவர். கமகப் பொழிவும் கவழியும் கொண்டு, ஸ்ரீராகத்தை நிதானமாயும், விரிவாயும், தெளிவாயும் ஆலாபனை செய்து அதில் அழகாய்த் தானம் வாசித்து 'ஸ்ரீவரலக்ஷ்மி' என்ற கிருதியை வழங்கினார்.

11ஆ. சென்னையில் எம். எம். தண்டபாணி தேசிகர் வழக்கம்போல் உணர்ச்சி ததும்ப தர்பார், தோடி ராகங்களையும் ஒரு ராகமாலிகையையும் பாடியதோடு 'முன்னு ராவண' உருப்படியில் நிரவல் ஸ்வரங்களையும் திறம்படப் பொழிந்தார். அவரிடம் வரவர அதிகமாகிவரும் பிர்க்கா சாதகம், பாவ சங்கீதத்துக்கு அவசியமா என்பது சந்தேகம்.

13ஆ. திருச்சியில் குஞ்சிதபாதம் சகோதரர்கள், காலையிலும் மாலையிலும் வாசித்த நாதஸ்வரம் குளிர்ச்சியாய்க் காதில் விழுந்தது. பரசு ராகத்தில் 'நீலயதாக்ஷி' கிருதி கர்ணாமிருதமா யிருந்தது. மற்றப்படி ரீதிகௌளை, வலஜி, ஷண்முகப்ரியா ராகங்களும் உருப்படிகளும் கச்சிதமா யிருந்தன.

அன்றிரவு திருச்சியில் ஆலத்தூர் சகோதரர்கள் முழு நேரக் கச்சேரி செய்தார்கள். ராகங்களில் வறாறு பாவப் பொழிவுடன் சிறப்பாயிருந்தது. 'தாமதமேன் ஸ்வாமி' என்ற தோடி உருப்படியில் அழகிய வேலைப் பாடுகளைக் காட்டினார்கள். கமாஸ், ரீதிகௌளை ராகங்கள் தரமா யிருந்தபோதிலும், அவைகளின் சொரூபங்களையும் தனிப்பட்ட அழகையும் இன்னும் கொஞ்சம் தெளிவாய்க் காட்டியிருக்கலாம். அது அவர்களுக்குப் பக்கவாத்தியமாய் அமைந்த ராஜமாணிக்கம் பிள்ளையின் அழகிய வயலின் வாசிப்பிலிருந்து தெரியவந்திருக்கும்.

9ஆ. சென்னையில் வி. அனந்தராமனின் பாட்டு குறிப்பிடத் தக்கது. நல் பாலி அசாவேரி ராகங்கள் தரமாயிருந்தன.

அன்று திருச்சியில் பி. கே. விச்வநாத சர்மாவின் வயலின் கச்சேரி வெகு சிரவணீயமா யிருந்தது. சங்கராபரணம், பேகடா முதலிய ராகங்களோடு சந்திரஜ்யோதியும், கம்பீர வாணி என்ற அபூர்வ ராகத்தில் 'ஸதாமதிம்' என்ற கிருதியும் மனோஹரமா யிருந்தன.

9ஆ. சென்னையில் வி. கே. வெங்கடராமனும் வயலின் வாத்தியத்தில் திறமையுடன் சாமா, லதாங்கி, த்விஜாவந்தி, முகாரி ராகங்களையும் அவைகளின் உருப்படிகளையும் வனப்பாய் வழங்கினார்.

அன்று அதே நிலையத்தில் வி. அங்கய்ய உடையாரின் கச்சேரி தேர்ச்சியா யிருந்தது. சற்றுப் பாந்த சரீரமாயினும், பிர்க்காப் பொழிவுடன் நல்ல உதவுபடி கொண்டது. காம்போதி மிகச் சிறப்பா யிருந்தது.

11ஆ. திருச்சியில் இருபாகமாய் மொத்தம் 1 மணி 5 நிமிஷம் கச்சேரி செய்த கல்லிடைக்குறிச்சி எஸ். லக்ஷ்மிக்குக் காத்திரமும் இனிமையும் கொண்ட குரல். நல்ல உதவுபடி. காம்போதி, மத்யமாவதி, பூர்விகல்யாணி, கரகரப்ரியா என்று ராகங்களையும் உருப்படிகளையும் சரமாரியாய்ப் பொழிந்தார்.

12ஆ. திருச்சியில் $1\frac{1}{2}$ மணி நேரம் பாடிய என். ஜி. சீதாராமனின் கச்சேரி முதல்தர வகைகளில் ஒன்று. மிருதுவான சாரீரம், தனிமான வழி. பூர்வி கல்யாணி ரீதிகௌளை ராகங்களோடு சங்கராபரணமும் தேர்ச்சியா யிருந்தன.

13ஆ. சென்னையில் என். அனந்தகிருஷ்ணனின் பாட்டு குறிப்பிடத்தக்கது. நய சாரீரத்தில் தோடி ராகத்தையும் 'கத்தனவாரிகி' உருப்படியையும் ஒழுங்காய்ப் பாடினார்.

• • •

இக்காலம் வயலின் வாத்தியத்தில் முன்னணியில் நிற்கும் நான்கு பெரிய வித்வான்களில் மைசூர் டி. சௌடய்யா ஓர் இயற்கை மேதையாவர். 18ஆ. சென்னையில் அவர் வாசித்த முழு நேரக் கச்சேரி அமர்க்களமா யிருந்தது. அவ்வாத்தியத்தில் அவர் செய்ய முடியாத வேலைப்பாடுகள் எதுவுமில்லை. ஒரு புறம் தனி நாதப் பெருக்கினாலே காதை நிரப்புவார். அடுத்தாற்போல் அசாத்ய கற்பனையினால் பிரமிக்க வைப்பார். ஒரு தடவை அதிதகால பிர்க்காவாகக் கொட்டுவார். மறு தடவை தொட்டவிடமெல்லாம் கமகமாக இழைப்பார். நடுநடுவே ஜால வேலைப்பாடுகளால் கலகலக்க வைப்பார். மொத்தத்தில் நாதப் பொழிவு, கற்பனை, அழகுபாவம் முதலிய உயரிய லக்ஷணப் பொருத்தங்கள் கொண்டு உணர்ச்சி யெழுப்பும் சங்கீதம். சில சமயங்களில் மேதைகளுக்கு இயற்கையான

சில கொனஷ்டைகளும் வந்துவிடும். அன்று அவர் வனப்பு வடிவங்களாய் வாசித்த கரஹரப்ரியா, காம்போதி, புன்னாகவராளி ராகங்களைக் கேட்டவர்கள் மூக்கில் கை வைத்திருப்பார்கள். உருப்படிகள், பல்லவி ஸ்வர ப்ரஸ்தாரங்கள் இவைகளிலும் அபோர வேலைப்பாடுகளைக் காட்டினார். பல்லவியிலும் 'கனகசைல' இறுதியிலும் வாத்தியத்துடன் கூடப் பாடி வாய்ப்பாட்டிலும் ஒரு கை பார்ப்பேன் என்பதை நிரூபித்தார்.

20ல. திருச்சியில் மற்றொரு வயலின் முழு நேரக் கச்சேரி செய்த கே. எஸ். வெங்கடராமய்யரும் அவ்வாத்தியத்தில் கை தேர்ந்தவர். வாசித்தவை யெல்லாம் ரஞ்சகமாயிருந்தன. பைரவி, அடாணா, சங்கராபரணம் ஹமீர்கல்யாணி ராகங்களும், இறுதி ராகமாலிகையும் சிறப்பா யிருந்தன.

19ல. திருச்சியில் டி. வி. நமசிவாயம் செய்த முழு நேரக் கச்சேரியின் பின்னாட்டிலும், காபி, நாராயணி, போகவசந்தம், பானுகீர்வாணி, பாலசந்திரிகா, நிசேந்திரிகா என்று எல்லாம் அபூர்வ ராகங்களாகவே அமைத்துவிட்டார். பாடியவை யெல்லாம் தமிழ் உருப்படிகள்.


சென்னையில் 16ல. மன்னார்குடி சாம்பசிவன், 19ல. கொத்தமங்கலம் ஸ்ரீனிவாஸன் இவர்களின் கச்சேரிகள் உயர்ந்த ரகமாயிருந்தன. முதல்வரது ஆபேரி, தோடி ராகங்களும், தோடி இறுதியில் அமைந்த திரவக் ஸ்வரங்களும் நன்றாக விருந்தன. கொத்தமங்கலம் சிறு கனிப்பும் ரஞ்சகமும் கொண்ட சாரீரத்தில் சிறந்த வேலைப்பாடுகளுடன் சங்கராபரணம், பைரவி, காபி இவைகளையும் ஹம்மீரா என்ற அபூர்வ ராகத்தையும் வனப்பாய் வழங்கினார். அளவுக்கு மேல் தாரஸ்தாயியில் பறக்கும் முயற்சிகளைச் சற்றுக் குறைத்து, கீழ் ஸ்தாயியிலும் போதிய உழைப்பு வைத்துக் கொண்டால், இவர் சங்கீதம் இன்னும் சுகமா யிருக்கும்.

17ல. திருச்சியிலிருந்து கேட்ட என். ஆர். ஸ்ரீனிவாசய்யங்காரின் கச்சேரி முதல்தர வகைகளில் ஒன்றாகும். அசாதாரண மதுரம் கொண்ட குரலில் அரிய வேலைப்பாடும் அழகு பாணியும் கொண்டு ஆனந்த பைரவி ராகத்தையும் பல உருப்படிகளையும் மனோஹரமாய்க் கையாண்டார்.

18ல. சென்னையில் சுந்தர தம்பியும், திருவாடி வி. வி. ராமசந்திரனும் செய்த கச்சேரிகள் வெகு தரமாயிருந்தன. முன்னவர் கனிப்பும் ரஞ்சகமும் கொண்ட குரலில் அடாணா, கல்யாணி ராகங்களையும் 'திருநாளை' இறுதியில் திரவக் ஸ்வரங்களையும் சக்கைப் போடு போட்டார். பின்னவரது பந்துவராளி, பைரவி, ஸிம்மேந்திர மத்யம ராகங்கள் ஜோரா யிருந்தன.

சென்னையில் 19ல. எம். எஸ். சௌரராஜன் வாய்ப்பாட்டும், ஜி. ஸ்ரீனிவாஸனின் வயலின் வாத்யமும் குறிப்பிடத்தக்கவை. முதல்வரது ஷண்முகப்ரியா, தோடி ராகங்கள் பிர்க்காப் பொழிவுடன் தரமாயிருந்தன. இரண்டாமவரது கல்யாணி, மணிரங்கு ராகங்கள் சுகமாயிருந்தன.

21ல. திருச்சியில் ஆர். நாராயணசாமி நய சாரீரத்தின் நல்ல உதவுபடியும் பிர்க்காப் பொழிவும் கொண்டு கல்யாணி, சரஸ்வதி, பைரவி ராகங்களையும், ஒரு ராகமாலிகையும் வண்ணமாய் வழங்கினார். 'இனியாகிலும்' உருப்படியில் திரவக் ஸ்வரங்கள் தரம்.



யமபுரியின் வாசலை எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பிய சுதந்திரப் போர் வீரர்கள் ஸ்ரீ காசிராஜனுக்கும் ஸ்ரீ ராஜகோபாலனுக்கும் சென்ற வாரத்தில் சென்னையில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தூக்குக் கயிறுக்குத் தயாராயிருந்த இவர்களுடைய கழுத்தில் நண்பர்கள் ரோஜாப்பூ மாலை போட்டு மகிழ்ந்தார்கள். இவர்கள் இன்று உயிரோடு நம் மிடையே வாழ்வதற்குக் காரண புருஷரான ராஜாஜியை வாழ்த்தினார்கள்; ராஜாஜிக்கு இம் முயற்சியில் உதவி செய்த நண்பர்கள் பலரையும் வாழ்த்தினார்கள்.

அவர்களை யெல்லாம் நாமும் வாழ்த்துவதோடு, இவ் விரு சத்தியவான்களுக்கும் இனி வரப்போகும் சாவித்ரிமார்களின் மாங்கல்ய பலத்தையும் மகிழ்ந்து வாழ்த்துகிறோம். நாலரை வருஷ காலம் தனிக் கொட்டடியில் ஒவ்வொரு நிமிஷமும் யமபாசத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த இவ் விரு இளந் தேசபக்த வீரர்களும் சகல சௌபாக்கியங்களுடன் நீடூழி வாழ்ந்து நண்பர்களையும் உற்றார் உறவினரையும் மகிழ்விப்பார்களென்று நம்புகிறோம்.

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

143. தீர்ந்தது காரியம்

திரிசிரா இறந்ததும் அரக்கப் படை
ளுக்கு ஒரே பயம் வந்து விட்டது. ஓட
ரம்பித்தார்கள். தூஷணன். அவர்
ளைத் தடுத்து நிறுத்திப் பேசுகிறான்:

"இப்படிப் பயந்து ஓடினால் உயிர் உட
லாடு நின்றுவிடவா செய்யும், மாட்
ாது. தைரியத்தைக் கொண்டுதான்
ம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.
ப்படி ஓடுவதற்கு எந்தப் பள்ளிக்
டத்தில் படித்தீர்கள்? தேவர்களிடம்
ான் கற்றிருக்க வேண்டும். காட்டுக்
ள் நுழைந்து நுழைந்து ஓடுகிறீர்களே.
துகெல்லாம் புண்ணாய் இருக்கிறது.
ந்த முதுகையா உங்கள் தேவிமாருக்குக்
ாட்டப் போகிறீர்கள்?"

கடைசியாக தூஷணனது வாயில்
ீரம் அபாரமாய்ப் பொங்கி வருகிறது.
அரக்க வீரர்களே, இப்படி ஓட ஆரம்
த்து விட்டீர்களே, இனிமேல் என்ன
சய்யப் போகிறீர்கள்? ரொம்பக் கேவ
ம் உங்கள் காரியம். கொழுக்கக்
காழுக்க ஒன்றுக்கும் உதவாத வணிக
ாய்க் கடையில் சப்பணம் போட்டு
ட்கார்ந்து கொண்டு சாமான்களைக்
ால்த் துட்டுக்கும் அரைத் துட்டுக்குமாக
ிற்கப் போகிறீர்களா? அல்லது கையி
ுள்ள கூரிய வேலையும் வீரச் செயல்கள்
சய்துள்ள வாளையும் இரும்பாக்கிக்
காழுக்கள் வடித்து 'உழுடா உழு'
ன்று உழப் போகிறீர்களா?

"உங்கள் கையிலுள்ள வாள் சாமானிய
ளா? பெரிய பெரிய தீரர்களிட
ருந்து, கடும் போருக்கிடையே பிடுங்கிய
ான் அல்லவா!

'ஆர வாழ்க்கையின்
வணிகராய் அமைதிரோ,
அயில் வேல்
வீர வான்கொடு
கொழுவடித் துழுதிரோ,
வெறி போர்த்
தீர வாழ்க்கையின்
தெவ்வரைச் செருவிடைப்
பறித் த
வீர வான்கையிர்!
எங்ஙனம் வாழ்திரோ,
விளம் பிர்!

[ஆர வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ: பணக் கொழுப்பும் தேகக் கொழுப்பும் கூடியவர்களாய் இருக்கிறீர்களே வணிகர்கள் — அவர்களைப் போலக் கடையில் சப்பணம் போட்டுச் சௌகர்யமாய் உட்காரப் போகிறீர்களா; அயில் வேல், வீர வாள் கொடு: கூரிய வேல் என்ன வீர வாள் என்ன இவைகளைக் கொண்டு கலப்பையிலுள்ள கொழுவாக்கி மண்ணை உழவா போகிறீர்கள்; வெறி போர்த் தீர வாழ்க்கையின் தெவ்வரை: வெறியோடு போர் செய்து செய்து தைரிய வாழ்க்கையிலேயே காலத்தைத் தள்ளுகிற பகைவரிட மிருந்து; செருவிடைப் பறித்த: யுத்தத்திலேயே பிடுங்கிய; வீர வாள் கையிர்: வாளைக் கையில் ஏந்தியவர்களே; எங்ஙனம் வாழ்திரோ விளம்பிர்: எப்படித்தான் வாழ்க்கையை நடத்தப் போகிறீர்களோ, சொல்லுங்கள் பார்க்கலாம்.

குறிப்பு:—தூஷணனது மனதில் உண்டான கொதிப்பும் ஆத்திரமும் அற்புதமான பாவமாய்ச் செய்யுளில் உரு எடுக்கிறது. தூஷணனுடைய பேச்சு அடங்கிய நாலு பாடல்களையும் வீர உணர்ச்சியோடும் மெய்ப் பாட்டோடும் பாடினால் எந்த சபையோர் உள்ளத்திலும் வீர உணர்ச்சி பிறந்து விடும்.]

மேலே சொன்னபடி பேசிய தூஷணன், அரக்கர்களைத் தன் வசமாக்கி நிறுத்திக் கொண்டான். "கொஞ்சம் நின்று என்னுடைய வில் செய்யும் வேலையைப் பாருங்கள்" என்றான். அப்படியே போய்த் தேரில் ஏறிக்கொண்டு ராமனைப் பார்த்து வருகிறான். அவ்வளவு சீக்கிரத்தில் அவனது தேர் வரவும், பார்த்தவர்களுக்கு ஒரே திகைப்பாய்ப் போய்விட்டது.

என்று நாலும், தன்
எதிகடல்ச் சேனையை
இணைக் கி,
'நின்று காண்டிர்என்
நெடுஞ்சிலை வலி' என,—
தே ரச்
சென்று தேர்வரத்
தேவரும் மருள்கொண்டு
திகைத் தார்:
'நன்று காத்தி' என்(று)
இராமனுக் கெதிர்சொலி
நடத் தான்.

[என்று நாலும்: மேலே கண்டவாறு பேசியவனும்; தன் எதிகடல்ச் சேனையை இணக்கி: அலைமோதும் கடல் போன்ற படையைத் தன் வசமாக்கிக் கொண்டு; தேரச் சென்று தேர்

வர்: அப்படியே சென்று தன் தேரின்மேல் ஏறி வரவும்; தேவரும் மருள் கொண்டு திகைத்தார்: நேராய்ப் பார்த்தவர்கள் எல்லோரும், (தேவர்களுமே) மயக்கம் கொண்டவராய்த் திகைத்து நின்று விட்டார்கள், — தூஷணன் தேரில் வருவதைப் பார்க்க அவ்வளவு பயங்கரமாய் இருந்தது: 'நன்று காத்தி' என்று: 'நன்றாய்ப் பாதுகாத்துக் கொள் உன்னை' என்று: இராமனுக்கு எதிர் சொல்லி: ராமனுக்கு எதிர்ப்பாக வீர வார்த்தை சொல்லிக் கொண்டு: நடந்தான்: தேரைச் செலுத்தினான்.]

தூஷணன் இப்படியெல்லாம் ஆரவாரம் செய்து கொண்டு போகிறான் தேரில்.

தேருக்குள் வில்லை ஏந்திக்கொண்டு ஒரு மலையே உட்கார்ந்திருந்தது போல் இருந்தது, தூஷணன் இருக்கை.

பார்த்தான் ராமன், "நீ இருக்கிற இருப்பு என் அம்புக்கு ரொம்ப வாய்ப்பாய் இருக்கிறது" என்று சிரித்தான். இந்த வார்த்தை தூஷணன் காதிலும் விழுந்தது.

சென்ற தேரையுஞ்
  சிலையுடை மலையெனத்
    தேர் மேல்
நின்ற தூடணன்
  தன்னையும் நோக்கிய
    நிம லன்,
'நன்று நன்று,நின்
  நிலை'எனப் பகர்ந்தனன்
    நகைத் தான் ;
என்ற காலத்(து) அவ்
  வெய்யவன் பகழிஒன்(று)
    எய் தான்.

[நிமலன்: ராமன்; பகர்ந்தனன் நகைத்தான்: சொல்லிச் சிரித்தான்; என்ற காலத்து: என்று சொல்லி சிரித்த அந்த க்ஷணத்தில்; அவ் வெய்யவன் பகழி ஒன்று எய்தான்: அந்தக் கொடிய அரக்கன் அம்பு ஒன்றை ஏவினான்.

குறிப்பு:— தூஷணன் தேரில் ஏறி வந்தான். பார்த்தான் ராமன், சிரித்தான். அவ்வளவு தான்: அரக்கனும் அம்பை ஏவினான். போரைத் துரிதமாக ஆரம்பிக்கிற பாவம் செய்யுளில் கிடக்கிறது.]

அம்பு எய்த முறையைப் பார்த்துக் கொண்டான் ராமன். யோசனை ஏதும் இல்லாமல், அவசரத்தில் சமயமும் தெரியாமல், வேகம் இல்லாமல் எய்தான் என்றும் தெரிந்து கொண்டான். சிரிப்பு வந்து விட்டது. அப்படியே அந்த அம்பைத் தன்னுடைய அம்பு ஒன்றால் சிதைத்தான். தாமசம் என்னத்திற்கு என்று தொடர்ந்து அம்புகளைப் பிரயோகித்து, அரக்கனது தேரை நொறுக்கி, கையிலிருந்த வில்லை அறுத்து, அணிந்திருந்த கவசத்தையும் உடைத்து விட்டான்.

எய்த காலமும்
  வலியும்தன் றெனநினைந்(து)
    இரா மன்,
செய்த சேய்ஒளி
  முறுவலன், அக்கணை
    சிதைத் தான் ;
தொய்யின் அங்கவன்
  நொறிற்பரித் தேர்பட
    நூ றிக்,
கையின் வெஞ்சிலை
  அறுத்தொளிர் கவசமுந்
    தடிந் தான்.

[செய்த சேய் ஒளி முறுவலன்: வெகு தூரம் பல்லின் பிரகாசம் தெரியும்படி சிரித்தவனும்: தொய்யின்: வெகு விரைவில்; நொறிற் பரித் தேர்பட நூறி: படபடவென்று ஓடும் குதிரை பூட்டிய தேரை நொறுக்கி; ஒளிர் கவசமும் தடிந்தான்: பளபளப்பான கவசத்தையும் உடைத்தான்.]

கவசம் உடைந்து கீழே விழுந்ததோ இல்லையோ, தேவர்களது ஆரவார முழக்கமும், முனிவர்களது வாழ்த் தொலியும் கடல் முழக்கம் போலக் கேட்க ஆரம்பித்தன. ஏன் அப்படி முழக்கம்?

தேவர் ஆர்த்தெழ
  முனிவர்கள் திசைதொறுஞ்
    சிலம் பும்
ஒலில் வாழ்த்தொலி
  நாற்கடல் முழுங்கென
    ஓங் க,
'காஅ டா இது
  வல்லையேல் நீ' எனக்
    கணை ஒன்(று)
ஏவினான் : அவன்
  எயிறுடை நெடுந்தலை
    இழந் தான் !

[தேவர் ஆர்த்தெழ: மதிப்புக்குள்ள பெ யவர்கள் ஆரவாரத் தோடு கைகொட்டி எ வும்; முனிவர்கள் திசை தொறும்: மு வர்கள் நாலாபக்கத்திலும் இருந்து: சிலம்பு ஒலில் வாழ்த்து ஒலி: ஒன்று சேர்ந் விடாது ஓதும் வாழ்த்தொழி; நாற்கட முழக்கென ஓங்க: நாலா பக்கத்திலும் உள்ள கடல்களின் முழக்கம் போல் வானத்தை எட்டி ஓங்க — (நெடுந்தலை இழந்தா தூஷணன்) காஅடா இது வல்லையேல் என: இதை முடியுமானால் தடுத்துக்கொ என்று: கணை ஒன்று ஏவினான்: அ பொன்றை ஏவினான் ராமன்: அவன்: எ ராகிய தூஷணனோ; எயிறுடை நெடு தலை இழந்தான்: கோரமான பல் வாயாய் இருந் அகன்ற வாயைக் கொண்ட தலையை இழ தான்: (அறுபட்டது தலை)]

தூஷணனுடைய வீரப் பேச்சு நீண்டிருந்தது. ஆனால் அவனுடைய காரியமோ சீக்கிரத்தில் முடிந்து விட்டது.



கோ. ரா.

உத்தியோகஸ்தர் :— எங்கே, செட்டியார் இல்லையா ?

காரியஸ்தர் :—அ வ ர !...... அவர் வந்து...... ஆமாம்; நீங்க யாருன்னு தெரிய வில்லையே?

உத்தியோகஸ்தர் :— அதெல்லாம் உமக்கு எதற்கு? செட்டியார் இருக்காரா, இல்லையாங்காணும்?

காரியஸ்தர் :—இல்லே ..... அவர் உள்ளே பூஜை செய்துகொண்டிருக்கிறார். ஹி! ஹி! விஷயத்தைச் சொன்னால் அவாளிடம் நான் சொல்கிறேன். ஹி...ஹி...!

உத்தியோகஸ்தர் :—அவரை நான் நேரில் பார்க்க வேணுங்காணும். நீர் போய்ச் சொல்லும்!

செட்டியார் .(காரியஸ்தரை நோக்கி) :—ன்னமோ எல்லாரும் சொல்லிக்கிட்டிருக்ங்களே 'ரேசன்', 'ரேசன்'னு, அந்த எளவுங்கேயும் வரப்போகுதா ?

காரியஸ்தர் :—ஆமாம்; அப்படித்தான் னும் கேள்விப்பட்டேன். அனேகமாக டுத்த மாதத்திலே பிருந்து வந்தாலும் ரலாமாம்.

செட்டியார் :—என்ன ! அடுத்த மாசமா? து என்னங்காணும் பெரிய எளவா ருக்கே ! பேசாம கடையை மூடிடலாம் பால இருக்கே? ஏற்கெனவே எதுக்கெடுத்தாலும் 'கண்ட்ரோல்' 'கண்டரோல்'னு ம்ம கழுத்தை அறுக்குறானுங்க! உம்...... ன்னமோ நமக்கு அரிசி வியாபாரமாச்சும் டைக்குமா ? அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்தீராங்காணும் ?

காரியஸ்தர் :—அதற்குத்தான் முயற்சி செய்துகொண்டிருக்கேன் !

செட்டியார் :—அட சட் ! என்னங்காணும் யற்சி ! விடிவிடென்று இம்புட்டு நேரம் ல்லாம் முடிச்சிருக்க வேண்டாமா ? மக்குக் கொடுக்கிற சம்பளம் தண்டளவுங்காணும் ! சத்தமா உமக்கு நம்ம டையிலே அக்கரையே இல்லையே ! டுத்த தெரு.......

[இந்தச் சமயத்தில் செட்டியார் வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நிற்கிறது. அதிலிருந்து 'சூட்' அணிந்த ஒரு பெரிய மனிதர் இறங்கி வருகிறார். அவரைக் கண்டதும் செட்டியார் விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடி விடுகிறார்.]

உத்தியோகஸ்தர் :—இதுதானே பழனியப்பச் செட்டியார் வீடு?

காரியஸ்தர் :—ஆமாம்; வாங்க! ஹி! ஹி! ப்படி உட்காருங்கள் !

[வந்தவர் கணக்குப் புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார். காரியஸ்தர் நடுங்கிக் கொண்டே செட்டியாரின் வீட்டுக்குள் நுழைகிறார்.]

செட்டியார் :—யார் வந்திருக்கிறது ?

காரியஸ்தர் :—யார் என்று தெரியவில்லை. பார்த்தால் பெரிய உத்தியோகஸ்தர் மாதிரி இருக்கிறார். 'தாட்பூட்' என்று அங்கிருந்த கணக்குப் புத்தகங்களையெல்லாம் எடுத்துப் புரட்டிக் கொண்டிருக்கிறார். உங்களை அவசரமாகப் பார்க்க வேண்டுமாம்.

செட்டியார் :— ஐயையோ ! கணக்குப் புத்தகங்களைப் பார்க்கிறாரா? இது என்னங்காணும், ஒருவேளை என்னமோ



ஏன் இப்படி உட்கார்ந்திருக்கேளாம்? ஏதோ வயசானவாளுக் கெல்லாம் கவர்ன்மெண்ட் அரிசிலே பென்ஷன் தரணாமே! போய் நீங்களும் வாங்கிண்டு வாருதானே.

இன்கம் டாக்ஸ் ஆபீஸர், அவரு, இவருன்னு சொல்லுவாங்களே......

காரியஸ்தர் :—அப்படித்தான் இருக்கும்.

செட்டியார்:—என்னங்காணும் இருக்கும்? உம்மைக் கட்டின்டு காணும் மாரடிக்கிறேனே! போய்த் தொலையுங்காணும்.

காரியஸ்தர் :—..............................!

செட்டியார் :—என்னங்காணும் நிற்கிறீர்?

காரியஸ்தர் :—அவருக்கு என்ன பதில் சொல்றது......?

செட்டியார் :—ஏதாவது சொல்லித் தொலையுமே!

[காரியஸ்தர் போகிறார். செட்டியார் பரபரப்புடன் ஒரு கிழிந்த வேஷ்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு மெதுவாக வெளியே வருகிறார்.]

செட்டியார் :— (வந்தவரை நோக்கி) :— நமஸ்காரமுங்க!

உத்தியோகஸ்தர் :—உம்......நீங்கள்தான் பழனியப்பச் செட்டியாரா?

செட்டியார் :—ஆமாங்க!

உத்தியோகஸ்தர் :—உம்......இது உங்களுடைய கடைதானே?

செட்டியார் :—ஆமாங்க; இந்தச் சின்னக் கடை என்னுடையதுதானுங்க?



"நீங்கள் யார்! இன்ஷூரன்ஸ் ஏஜண்டா? தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள், ஸார்!"

"நான் இன்ஷூர் விஷயமாக வரவில்லை. கீழத்தெருவில் உள்ள தங்கள் வீடு காலியாக இருக்காமே, அது விஷயமாகவே வந்தேன்."

உத்தியோகஸ்தர் :— என்ன! சின்ன கடையா? உம்...... என்னென்ன விய பாரம் செய்கிறீர்கள்?

செட்டியார் :—உம்...... வியாபாரமாவது மண்ணாங்கட்டியாவது! எல்லாம் ரொம 'டல்'லுங்க! இப்பத்தான் எல்லாத்துக்கு 'கண்ட்ரோல்' 'கண்ட்ரோல்'னு வைச்ச டாங்களே! சாமான் எங்கே கிடைக்கி துங்க? அப்படியே கிடைச்சாலும் கொ சம்தானே கிடைக்குது! அதை வை கிண்டு பெரிய லாபத்தை எங்கே புரட்டிட போறேனுங்க?

உத்தியோகஸ்தர் :— அப்படின்னு இ போது உங்க வியாபாரம் நசமில்லேன் சொல்லுங்க!

செட்டியார் :—சுத்த மோசங்க! அதோ இந்த ரேசன் வேறே இந்த ஊருக்கு வரப்போகிறதா மில்லே......?

உத்தியோகஸ்தர் :—ஆமாம்; அடுத் மாதத்திலே யிருந்து வரப்போகிறது.

செட்டியார் :—பின்னே என்னங்க, கேட் வேண்டியதே இல்லீங்க! கடையை பேசாம மூடிவிட வேண்டியதுதானுங்க!

உத்தியோகஸ்தர் :—அட பாவமே! எ அப்படி?

செட்டியார் :—ஏனு! வியாபாரமேதா கிடையாதுங்களே! இந்த 'டல்'லு வியாப ரத்திலே அந்த ரேசனும் வந்து விட் எனக்கெல்லாம் எங்கே வியாபாரம் நடக்க போகிறது?

உத்தியோகஸ்தர் :—த்ஸோ, த்ஸோ! கி மாகவா?

செட்டியார் :—என்னுங்க, நான் பொய்ய சொல்லுவேனுங்க? என்னமோ போக இந்தக் கடை என் தாத்தா காலத்திலே யிருந்து இருக்குங்க. இவ்வளவு காலமாயிருந் கடையை என் தலைமுறையிலே பூட் வேண்டாம்னு பார்த்தேனுங்க. ஆனா அ முடியாது போல இருக்கு!

உத்தியோகஸ்தர் :—உம்...ஒரு நாளைக் எழுபது, எண்பதுக்காவது வியாபார நடக்குமா?

செட்டியார் :—ஐயோ! எழுபது, எ பதா? ஏ, அப்பா! இன்னிக்கெல்லா இருந்தாலும் என் கடையிலே பத்து பன்னிரண்டு ரூபாய்க்கு மேலே ஏதுங் வியாபாரம்?

உத்தியோகஸ்தர் :—அப்படின்னு அந் அருணாசலம் செட்டியார் சொன்......

செட்டியார் (இடைமறித்து) :—யாருங்க? ...ந்தக் கோடி வீட்டு அருணாசலமா? அவர் ...சொல்றதை யெல்லாம் நீங்க நம்பாதீங்க. ...யவருக்கும் எனக்கும் கொஞ்சம் மனத் ...தாங்கலுங்க. அதுக்காக இப்படி பொய்யும் ...ளுரும்......

உத்தியோகஸ்தர் :—சரி; அது கிடக்கட் ...ம். இந்த ஊரில் அருணாசலம் செட்டி ...யாருக்கு அடுத்தபடியாக யாருக்கு நன்றாக ...வியாபாரம் நடக்கிறதென்று உங்களுக்குத் ...தெரியுமா?

[இந்தச் சமயத்தில் செட்டியாருக்குத் தம்முடைய பழைய வைரியான நாகப்பச் செட்டியாரின் ஞாபகம் வந்தது.]

செட்டியார் :—தெரியுங்க!.........நடுத் ...தெரு நாகப்பச் செட்டியார் ஊரிலே ...கொஞ்சம் நல்ல புள்ளிங்க. அவருக்கு ...நல்ல வியாபாரம் நடக்கிறதுங்க!

உத்தியோகஸ்தர் :—சரி; நான் போய் ...விட்டு வருகிறேன். அந்த நடுத்தெரு ...நாகப்பச் செட்டியாருக்கே கொடுத்து விடு ...கிறேன்!

[வந்தவர், 'கொடுத்து விடுகிறேன்!' என்றதும், ஏதாவது 'கொண்ட்ராக்ட்' கொடுத்து விடப் போகிருரோ என்னமோ என்று செட்டியார் பயந்து விடுகிருர். இந்த விஷயத்தில் தம்முடைய மண்டை எங்கே உருளுமோ என்று அவர் கவலைப்படுகிருர்.]

செட்டியார் :—அவருக்கு என்ன கொடுக் ...கப் போறீங்க? என் பேரை ஏதோ எங்கே ...யாவது நீங்க இழுத்து விட்டு விடாதீங்க. ...என் பிள்ளை குட்டி......

உத்தியோகஸ்தர் :—அதெல்லாம் ஒன்று ...மில்லை. அடுத்த மாதம் இந்த ஊருக்கு ...'ரேஷன்' வரப்போகிறது என்று சொன் ...னேனே இல்லையோ, அரிசி வியாபாரம் ...இரண்டுபேர்தான் செய்யலாம் என்று ...ஆர்டர்!" அதிலே ஒரு ஆர்டர் அருணா ...சலம் செட்டியாருக்குக் கொடுத்து விட் ...டேன். அவர்தான் இன்னொன்றை உங்க ...ளுக்குக் கொடுங்கள் என்றுர். நீங்கள்தான் ...கடையையே பூட்டப் போகிறேன் என் ...கிறீர்களே! அதனுலே அந்த ஆர்டரை ...நீங்கள் தெரிவித்த நாகப்பச் செட்டியா ...ருக்கே கொடுத்து விடுகிறேன்.

[உத்தியோகஸ்தர் போய் விடுகிருர். செட்டியார் கற்சிலை போல் ஸ்தம்பித்து நிற்கிருர்!]

கோடைச் சித்திரம்

சந்த்ரா

உருகிய தார் நாற்றம் தெருவிலிருந்து வருகிறது. தெருவுக்குத் தார் அடிக்கும் யுக்தியைக் கண்டு பிடித்த மேதாவிகள், அதன் நாற்றத்தைப் போக்க ஏதேனும் தந்திரம் செய்திருக்கக் கூடாதா?

முகட்டின் மேலே ஒரு மணிப்'புறா உருகி உருகிக் கூவுகிறது. தோட்டத்தில், 'தாகம், தாகம்' என்று வறண்ட தொண்டையில் ஒரு காகம் கரைகிறது. 'லொட்டு லொட்' டென்று மரம் கொத்திப் பறவை ஒன்று, மரத்தையும் காதையும் துளைக்கிறது. வான வெளியில் வெகு தூரத்திலிருந்து, கானல் கீதம் பாடுகிறது ஒரு கருடன்.

உடலே பிசாசு மாதிரி, மின்சார விசிறி சுழன்று கொண்டிருக்கிறது. அதை நான் சிறிதும் ஓயவிடாமல் ஆட்டி வைப்பதினால், அதற்குக் கோபம் போலும். முக்கிக் கொண்டும், முனகிக் கொண்டும், புலம்பிக் கொண்டும் சுற்றுகிறது. அது சுற்றுவதினால் வியர்வை இல்லையே தவிர, குளுமை சிறிதும் கிடையாது. அதுதான் என்ன செய்ய முடியும்? பனி நீரையும் பன்னீரையும் கலந்து தலையில் வர்ஷிக்க முடியுமா? இருக்கிற அக்னிக் காற்றைத்தானே, ஸர்க்கஸில் குதிரையை விரட்டுகிறமாதிரி, சுற்றிச் சுற்றி ஓட்டி வைக்க முடியும்?

மறுபடியும் தார் நாற்றம் அலைபோல் வருகிறது. 'வெள்ளரிப் பிஞ்சு, வெள்ளரிப் பிஞ்சு!' என்று ஒரு கிழட்டுக் குரல் கத்துகிறது. 'இட்டடி சோவ எடுத்தடி கொப்புளிக்க வட்டில் சுமந்து' செல்கிறான் பாவம்:— என்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே இரக்கப்படுகிறேன். வெள்ளரிக்காய்க் காரிக்குப் போட்டியாக இளங் குரல் ஒன்று, 'ஐஸ் க்ரீம், ஐஸ் க்ரீம்!' என்று சில் வண்டு மாதிரிக் கத்துகிறது.

வெள்ளரிப் பிஞ்சைத் துண்டம் துண்டமாக நறுக்கி, நறுக்கிய துண்டுகளை ஐஸ் க்ரீமில் தோய்த்துத் தின்றால் நன்றாயிருக்கும் என்று அபூர்வ யோசனை ஒன்று தோன்றுகிறது. ஆனால், இந்த யோசனையைச் சோதித்துப் பார்க்க வேண்டுமானால், சாய்வு நாற்காலியையும் மின்சார விசிறியையும் விட்டு எழுந்திருந்து வாசற் கதவைத் திறக்க வேண்டும். திறந்தாலோ வெட்பமும் நாற்றமும் சேர்ந்து ஒரே தாக்காகத் தாக்கும். ஆகவே, சும்மா இருப்பதே சுகமென்று இருந்து விடுகிறேன்.

வெள்ளரிப் பிஞ்சுக்கு ஆசைப்பட்டு வெளியே சென்று, 'ஸன் ஸ்ட்ரோக்' அடித்து விட்டால் என்ன செய்வது? சாதாரணமாக வெய்யில் வேளையில் நான் தலையை வெளியே நீட்டுகிறதே கிடையாது. அப்படியே நீட்டினாலும் தக்க பாதுகாப்புக்களுடன்தான் நீட்டுகிறது. தலைக்கு உயர் குடை; கண்களுக்குக் கறுப்பு வர்ணக் கண்ணாடி; கால்களுக்கு கனத்த ஜோடுகள்; நரம்புகளின் தலைமைத் தந்தி ஆபீஸ் இருக்கும் பிடரியில் ஈரச் சவுக்கம் — இத்தனை முஸ்தீபுகளுடன்தான் வெய்யிலில் இறங்கத் துணிவேன். இத்தனையும் போதாதென்று புறப்படுவதற்கு முன்னால் ரயில் எஞ்சினுக்குத் தண்ணீர் அடைக்கிற மாதிரி நாலைந்து டம்ளர் பானைத் தண்ணீரைக் கடகடவென்று குடித்து விட்டுத்தான் புறப்படுவேன். [illegible] என்னதான் நம்மை 'மனிதர்கள்' என்று உசத்தியாய்ச் சொல்லிக் கொண்டு போனாலும், நாமும் நீராவி இயந்திரங்கள்தானே!





இரைக்கும் வேகத்திலிருந்து உஷ்ணத்தை அளந்துவிடலாம்.

வெய்யிலில் கொஞ்ச தூரம் சென்றாலே போதும்; நிழல் அருமை தெரிகிறது. யாருக்குத் தெரிகிறது? எனக்கும் என்னைப் போன்ற சுகவாசிகளுக்குந் தான். வெய்யிலின் கொடுமையைத் தவிர நிழலின் அருமையை அறிய முடியாதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ரிக்ஷா வாலாக்களைப் பாருங்கள்: தகிக்கும் வெய்யிலில் வியர்வை பெருகி ஓட, கொல்லன் துருத்திமாதிரி மூச்சு மூக்க, தனவான்களை இழுத்துக்கொண்டு ஓடுகிறார்கள். வண்ணானைப் பாருங்கள். நீங்களும் நானும் ஜம்மென்று வேஷம் போட்டுக் கொண்டு உலாவும் பொருட்டு, தீப்பொறி பறக்கும் சுடு மணலில் நின்று நம்முடைய ஆடையை உலர்த்துகிறார்கள். இவர்கள் பசிக் கொடுமைக்கு அஞ்சி, வெய்யிலின் கொடுமையைச் சகித்துக் கொள்கிறார்கள்.

இந்தப் பாட்டாளிகளுக்கு வெய்யிலின் உக்கிரத்தை இவ்வளவு என்று அளந்து சொல்லலாம் என்பது தெரியாது. படித்தவர்களோ அப்படியல்ல. பத்திரிகையின் மூலம் முதல் நாள் உஷ்ண அளவை அறிந்து மறுநாள் முழுதும் தவிக்கிறார்கள். இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவன் தான் நானும்!

டிகிரி மீது மட்டத்துக்குக் கொஞ்சம் அதிகமானாலுங்கூட ஓய்வும் வசதியும் பணமும் உடையவர்கள் பொறுக்க மாட்டார்கள். வெண்ணெயால் ஆக்கப்பட்டதாகக் கருதிக் கொள்ளும் இந்த ஆசாமிகள் எங்கே உருகிப் போய் விடுவோமோ என்று பயந்து, பெட்டி படுக்கைகளை மடக்கிக் கொண்டு, பரிவாரங்களைத் திரட்டிக்கொண்டு மலைவாசத்துக்கு ஓடிவிடுகிறார்கள். இந்த உல்லாச மலைவாசிகள் தங்கள் பாட்டுக்கு ஜிலுஜிலுப்பை அனுபவித்துக் கொண்டு சும்மா இருப்பதில்லை. மலைமேல் உட்கார்ந்து கொண்டு 'சமவெளி'யில் வசிக்கும் வக்கில்லாத நண்பர்களுக்கு அவர்களின் வயிற்றெரிச்சலைக் கிளப்பும் நோக்கத்துடன் ஜம்பக் கடிதங்கள் எழுதுகிறார்கள். தாங்கள் வெந்நீரில் குளிப்பதாயும், வெந்நீரையே குடிப்பதாயும், இரவில் கம்பளி போர்த்திக் கொண்டு தூங்குவதாயும், பட்டணத்தில் 106 டிகிரி என்பதைப் பேப்பரில் பார்த்து விட்டு விழுந்து விழுந்து சிரிப்பதாயும் எழுதுகிறார்கள்.

நான் ஏதோ மிகைப்படுத்திக் கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். மலை வாசம் செய்யும் என் நண்பர் ஒருவர், மேலே சொன்ன தோரணையிலேயே ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அக் கடிதத்தில் ஒரு பகுதி: "நான் பனிக் குன்றில் வசிக்கிறேன்; நீ பாலைவனத்தில் வசிக்கிறாய். எனக்கும் உனக்கும் இவ்வளவு ஏற்றத் தாழ்வு இருக்கும்போது, நீ சொன்ன விஷயத்தை நான் ஒப்புக்கொள்ளவோ, நான் சொன்ன விஷயத்தை நீ ஒப்புக்கொள்ளவோ முடியாது தான்!"

இந்தக் கடிதத்தைச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே படித்தவன், அப்படியே சோர்ந்துபோய்க் கண் அயர்ந்தேன்.........

வெண்பனித் தீவில் ஒரு சந்தனச் சோலை. அச்சோலையின் மத்தியில் ஒரு பவளமாளிகை. தேக்கடம்பு ஆசனத்தில் அமர்ந்து தேன் மதுரக் கவிதைகள் வாசிக்கிறேன். இரண்டு பக்கத்திலும் இரண்டு மயில்கள் நின்று, வர்ணத் தோகைகளை விரித்துச் சொகுசாக விசுகின்றன.

பணிவிடைகள் செய்யப் புஷ்பப் பதுமைகள்—ரோஜா, மல்லிகை, ஜவந்தி, அல்லி, பாரிஜாதம், மந்தாரை, சண்பகம், மனோரஞ்சிதம் முதலான மலர்கள், அதனதற்கு இயற்கையான நிறம், குணம், மணம் வடிவங்களுடன் பதுமை உருக்கொண்டு பணிவிடை செய்கின்றன. மோனஜா தெய்வே மாதிரி, பாதங்களில் சதங்கை அணிகள் அணிந்து கொண்டு சுருக்கு நடனம் ஆடுகின்றன. ஒரே கதம்பக் கோலாகலம்!

மாளிகை அருகிலே ஒரு பன்னீர்ப் பொய்கை. அப் பொய்கையில் ஆனந்தமாய்த் தத்திக் களிக்கிறேன். அதன் ஸ்படிகப் படித் துறையில் அமர்ந்து, தத்தித் தத்திக் கூத்தாடும் பெங்குவின் பட்சிகளுடன் விளையாடுகிறேன்.

தலைக்கு நேர் உயரே சூரியன் காணப்படுகிறது. ஆயினும் அதன் கிரணங்கள் சீதக் கதிர்களாகவே இருக்கின்றன. இது என்ன சூரியனா அல்லது சந்திரனா என்று சந்தேகம் உண்டாகிறது. சந்தேகமில்லை; சூரியன் தான். இதோ பொய்கையில் தாமரை ஒன்று புன்னகை செய்வதே அதற்கு அத்தாட்சி. என்ன ஆச்சரியம்! தாமரை பொன்னிறமாக வல்லவா இருக்கிறது! பொன் தாமரைக்கு வாசனை உண்டா என்று சோதிக்க எண்ணி, அதைப் பறித்து முகர்ந்து பார்க்கிறேன்.........

சே! நார் நாற்றமல்லவா வீசுகிறது! ஆம்; கனவு கலைந்து விட்டது. கண்ட கனவும், காணும் நனவும் ஒன்றுக்கொன்று நேர்மாறாக இருப்பதை எண்ணி எண்ணி வருந்துகிறேன்.

ஜன்னலுக்கு வெளிப்புறத்தில் ஏதோ சத்தம் கேட்கிறது, என்ன வென்று எட்டிப் பார்க்கிறேன். அவர் நிழலில் ஒரு நாய், நாக்கை நீளமாகத் தொங்கப் போட்டுக் கொண்டும், ஒரே இரைப்பாக இரைத்துக் கொண்டும் படுத்திருக்கிறது.

வெய்யிலை அளந்து பார்க்க உஷ்ணமானி எதற்கு? நாய் இரைக்கும் வேகத்தைக் கொண்டே உஷ்ணத்தை அளந்து விடலாமே! இந்த நாய் இரைக்கிறதைப் பார்த்தால், இன்றைய உஷ்ணம் 110 டிகிரி இருக்கலாம் என்று தோன்றுகிறது. 110 டிகிரியில் நார் உருகாமல் என்ன செய்யும்? கருங்கல்லே உருகி விடும் போலிருக்கிறதே!

துறவறம்

ரா. வீழிநாதன்

"முடியாது; முடியவே முடியாது. இனி உன்னோடு இருக்கவே முடியாது" என்று வேகமாக வாசற் கதவை உதைத்துத் திறந்து கொண்டு, உள்ளே சென்று கூறினேன்.

"எதற்காம் இத்தனை கோபம்? குடும்பம்னு எல்லாத்தா னிருக்கும். இதற்காக வீட்டை விட்டு விட்டுப் போயிடறேன்னு யாராவது குதிப்பானோ?"

நான் பேசாமல் நின்றேன்.

"வாயைத் திறக்கக் காணுமே! குடும்பத்துச் சண்டை பூசல்களைக் குறைத்தும், வியாதியை அதிகப்படுத்தியும் கூறுவதுதான் நல்லது என்று பெரியவர்கள் சொல்வதுண்டு. நீங்க குடும்பக் காரியங்களை 'டாம் டாம்' அடிச்சுடறேள். இது சரியா! அதிருக்கட்டும், என்மேலே சீறி விழறேளே, நான் என்ன தப்பு செய்துட்டேன், சொல்லுங்கோ!"

"நீ செய்ததைத் திருப்பியும் சொல்லணுமா!"

"வேண்டாம்; வேண்டவே வேண்டாம்."

"அப்போ நீ என்னோடே பேசாதே!... ஏ கமலா!... கமலா!... போய் ஒரு வண்டி கொண்டு வா, சொல்றேன்."

"அடி கமலா! நித்தே இருடி... ஆமாம், நீங்கள் எங்கே போகப் போறேள்? அதை முன்னாடி சொல்லுங்கோ!"

"எங்கே போனால் உனக்கென்ன?"

"அப்பா! வண்டி கொண்டு வரட்டுமா?"

"இன்னும் இங்கேயேதான் நின்னுண்டிருக்கியா?"

"அப்படின்னா, நீங்க போகத்தான் போறேளா?"

"கேட்பானேன்? போகிறேன்; நிச்சயமாய்ப் போகத்தான் போகிறேன்" என்று பொங்கும் துயரத்தை அடக்கியவாறு கூறினேன்.

"சரி, அப்படின்னா எப்போ திரும்புவேள்?"

"இன்னும் பரிகாசமா உனக்கு? இனி திரும்பி வரதுக்கிறதில்லே. இந்த வீட்டிலே... ... என்று ஆரம்பிப்பதற்குள் என் தொண்டையில் ஒருவித நடுக்கம் ஏற்பட்டது.

நான் கூறின வார்த்தைகள் வேடிக்கைக்கல்ல; விளையாட்டிற்கல்ல; உண்மையே! முற்றிலும் உண்மையே! வீட்டை விட்டு வெளியேறிவிடுவது என்று தீர்மானமாகத் தீர்மானித்திருந்தேன். ஆம்; ஆனந்தமில்லாத வாழ்க்கை எதற்கு? அதற்காக உயிரை விட்டுவிடுவதும் சரியல்ல. நான் இல்லாவிட்டாலும் எனது பிதுரார்ஜிதமான சொத்தைக் கொண்டு என் குடும்பம் நடந்துவிடுமல்லவா?

ஆனால் குழந்தைகள்! கடவுள் காப்பாற்றுகிறார். நான் இருந்து என்ன செய்யப் போகிறேன்? அதனால் துயரக் களஞ்சியமான இந்த வறண்ட குடும்பத்தை விட்டு வெளியேறிவிடுவது என்றும். அன்னியன் போல க்ஷேத்திராடனம் செய்வது, பக்திக்கும் முக்திக்கும் வழி தேடுவது என்றும் எண்ணினேன். நான் சொல்வது பூராவும் உண்மை. நம்புங்கள்; அதன் பொருட்டே எனது மனைவி தங்கத்திடம் விஷயத்தைப் பூராவும் கூறினேன். ஆனால் அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

"நிஜமாக நீங்கள் போகப் போறேளா?" என்று தங்கம் கேட்டாள்.

"ஆமாம்."

"சரி, போறேக்கறவாளைக் கட்டிப்போட முடியுமா? ஆனால் ஒரே ஒரு விஷயம். பாப்பா தானும் அப்பாவுடன் வருவேன்னு சொல்றாள். பாருங்கோ, கை நீட்டுகிறதை! ஒரு தரம் எடுத்து வச்சிக்குங்கோ."

"எடுத்துக்கறதா? அதுதான் முடியாது. பாசத்தை அறுத்துக் கொண்டு போகப் போகிறேன். என்னை அன்புக் கயிற்றிலே கட்டிப் போடாதே. போகவிடு; தடுக்காதே!"

சிறிது நேரம்வரை ஒருவருமே பேசவில்லை.

"சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, புத்தம் சரணம் கச்சாமி'— அப்பா! சிக்கலான பிரச்னையான்னா இருக்கு! நீங்களோ புத்தபகவானின் அவதாரமாகவே ஆய்விட்டேள். புத்த பிரானின் அவதாரம்னு சொல்றதுகூடத் தப்பு. புத்த பகவானாவது மகாபிநிஷ்கிரமணத் (காடு துறத்தல்) தின்பொழுது பெண்டாட்டி பிள்ளையை ஒரு தடவை அன்புடன் பார்த்தார். நீங்கள் அவருக்கு ஒருபடி மேலேயே போய் விட்டேள்!"

நான் சிறிது யோசித்துக் கூறினேன். "சரி, ஒரு தடவை கொடு; ஒரே ஒரு தடவை மட்டும்.........ஒரே ஒரு தடவை பார்த்து முத்தமிடுகிறேன்."

"இந்தா வாங்கிக்கோ!"

"என்னை இப்பாசத்தில் கட்டிப் போடாதே. புத்தம் சரணம் கச்சாமி..."

"உங்கள் கிட்டே இருந்து வரவே மாட்டேங்கிறானே!"

"வாங்கிக்கோயேன். போதுமே......" என்றேன் சற்றுக் கலங்கியவனாய்.

"வரமாட்டேங்கிறானே! நான் என்ன செய்ய? ஒன்று செய்யுங்கோ. இவனையும் எடுத்துண்டே போயிடுங்கோ. ஜாக்கிரதையாகக் காப்பாத்துங்கோ. உங்க சிஷ்யனாய் விடுவன்!"

"முடியாது; அதெல்லாம் முடியாது. வாங்கிக்கோ இவனை!"

"நிசமாகவே நீங்க போகத்தான் போறேளா?" என்று கூறிக் கொண்டே வாசற்புறம் வந்தாள். குழந்தைகள் எல்லாம் கிளம்பத் தயாராக நின்றுகொண்டிருந்தன.

"டேய், எதுக்கடா செருப்புப் போட்டுக்கிறே?"

"நானும் உன் பின்னோடே வரப் போறேனப்பா!"

"அட முட்டாளே! நீ வீட்டை விட்டு விட்டு வரதாவதுடா!"

"நானும்தான் அப்பா!"

எனது ஐந்து வயதுப் பிள்ளை கூறின சொல்தான் இது.

"அப்பா, நான்கூட" என்று கூறிய வண்ணம், எனது பெரிய பெண் சிவா தலை குனிந்தாள்.

என் குழந்தைகளும் என்னுடன் சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் புறப்பட்டன. பகவான் புத்தருக்கு ஒரே ஒரு குழந்தை. அதனால்தான் அவர் 'சுலபமாகக் கிளம்பி விட்டார். அதுவும் தூங்குகிற சமயம் பார்த்து நடுநிசியில் புறப்பட்டார். பட்டப் பகலில் இப்படி அரை டஜன் குழந்தைகளை ஏமாற்றி விட்டுக் கிளம்பிப் போவது எப்படி?

நான் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து விட்டேன். அசைந்துகூடக் கொடுக்கவில்லை. குழந்தைகள் என் முன்னிலையில் நின்றுகொண்டு உற்று நோக்கின. நான் கடுகடுப்புடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் பெரிய குழந்தைகள் ஒவ்வொன்றாக நழுவி விட்டன. சிறிய குழந்தை அழுது கொண்டே தாயை நாடிச் சென்றுவிட்டது. நான் கண்களை மூடிக்கொண்டேன்.

என் கண்களின் முன்னிலையில், ஒரு காட்சி தோன்றியது. சித்தார்த்தரின் வேலைக்காரன் குதிரை யொன்றை கோட்டைக்கு வெளியே கொண்டுபோய்த் தயாராக நிறுத்தி வைத்திருந்தான். பகவான் புத்தர் ஏராளமான ஐசுவரியத்தையும் மனைவி, மகனையும் துறந்துவிட்டுக் கம்பீரமாக அரண்மனை வாசற்படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார். இக் காட்சியைக் கண்ட நான், அவரை வேண்டிக்கொண்டு கண்களைத் திறந்து சுற்று முற்றும் பார்த்தேன். ஒரு பெருமூச்சு விட்டு விட்டு மெதுவாக எழுந்து வீட்டைத் தாண்டி, இந்த அகன்ற உலகத்தில் காலை வைத்தேன். பகவான் புத்தரை ஸ்மரித்த வண்ணம், தெருத் திருப்பத்தை அடைந்தேன். அதற்குள் என் பெண் ராதாவும், பையன் ராமுவும் "அப்பா, அப்பா!" என்று உரக்கக் கூவிக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தனர். பையன் கால் சட்டை, கைச் சட்டை, கால்களில் செருப்பு, தலையில் குல்லா முதலியன போட்டுக் கொண்டிருந்தான். அவன் என்னைத் தாண்டி நான்கு அடி முன் சென்று விட்டான். பின்னால் திரும்பித் திரும்பி "நான் வருகிறேனா?" என்பதையும் கவனித்துக் கொண்டே சென்றான். ராதா என்னருகில் வந்து விட்டாள். இதையெல்லாம் எங்கிருந்தோ பார்த்துக் கொண்டிருந்த சிவாவும் ஓடிவந்து எங்களுடன் சேர்ந்து கொண்டாள். பெண் குழந்தைகள் இரண்டும் கலர்ப் பாவாடையும் கழுத்தில் சங்கிலியும்



"அப்பா! நீ எனக்கு டிராம் வாங்கிக் கொடுத்ததிலிருந்து நான் நிறையப் பணம் சம்பாதிக்கிறேன்."
"எப்படியடா, கண்ணே!"
"இதைக் கொட்டாமல் இருப்பதற்கு அம்மா எனக்கு தினம் இரண்டணா கொடுக்கிறாள்."

போட்டுக் கொண்டிருந்தனர். கையோடு இம் மூலையும் கண்டதும் நான் திக்பிரமை பிடித்தவன் போலானேன். பெண்களைக் கூப்பிட்டு, "நீங்களெல்லாம் வீட்டுக்குப் போங்கள்" என்றேன்.

ராமுவிடம், "நீ எங்கேடா வரே? வீட்டுக்குப் போ" என்றேன்.

அவன் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு, "நானும் உன் கூடத்தான் வரேன், அப்பா!" என்றான்.

ஒருவராவது வாய் திறக்கவில்லை.

"மூர்த்தா நானே என்னை ஏமாத்திப் பிட்டேள். இன்னிக்கி நானும் வருவேன் அப்பா!" என்றான் ராமு.

"அடே, முன்னாடி நான் எங்கே போறேன், சொல்லேன்" என்றேன்.

"அப்பா, நீங்கள் சினிமாவுக்குப் போறேள். அம்மாதான் சொல்லிப்பிட்டாளே, அப்பவே."

"என்ன! என்ன!"

நான் வியப்புற்றேன். இரு குழந்தைகளும் காலைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டன. அந்தத் தெருவிலுள்ள ஸ்திரீகள் ஜன்னல் வழியாக இக் காட்சியைக் கண்டு நகைத்தனர். எனக்கு ரொம்ப வெட்கமாயிருந்தது. நான் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு, வீட்டிற்குத் திரும்பினேன். ராமு, வேண்டா வெறுப்பாகப் பின்னோடு வரலானான். வாசற் கதவு சாத்தியிருந்தது. தட்டினேன்.

உள்ளிருந்து பதிலே வரவில்லை.

"கதவைத் திற, நான்தான்......"

"கைக் காரியமாயிருக்கேன்."

"என்னடி வேடிக்கை? திறக்க மாட்டாயா?"

"அப்பா, அம்மாதான் கதவைத் திறக்க மாட்டேங்கிறாளே! வாங்கோ, நாம் போயிடுவோம்" என்றான் பையன்.

"ஆமாம், ஆமாம்; பிள்ளையாண்டான்தான் சொல்றானே, அதைக் கேக்கறதுதானே!" என்று கூறிய வண்ணமே கதவைத் திறந்தாள் தங்கம்.

"ஏன் திரும்பி வந்துட்டேள்!"

ரொம்ப சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்டாள் அவள்.

"இந்தப் பீடைகளெல்லாம்......"

"அதுக்கு நான் என்ன செய்ய?"

"உன் கூத்துத்தானே இதெல்லாம்?"

"என் கூத்தா? நன்னாயிருக்கு. எல்லாம் உங்களாலேதான்!" என்று கண்ணைச் சிமிட்டி என்னுள்ளத்தை இழுத்தாள்.

"போதுமே பரிகாசம்!" என்றேன்.

"உங்க பக்கத்திலே யிருந்து விடப் போறேன்னேளே! முன்னாடி இந்த பக்கத்திலே யிருந்து விடத் தெரியலையே!"

"வழி விடு" என்று கடுகடுப்புடன் கூறினேன்.

"முதலில் தோல்வியை ஒத்துக்குங்கோ!"

"தோத்துப் போயிட்டேன். போதுமா? வழியை விடு. தெருப் பொம்மனாட்டிகளெல்லாம் பார்த்துச் சிரிச்சிண்டிருக்கிறார்கள், பாரு!"

"தோத்துப் போயிட்டேன்னு சொன்னால் போதாது. நெப்போலியன் தோற்று விட்டபொழுது, ஆங்கிலேயர்களின் கொடிக்கு வணக்கம் புரிந்தானே, அது மாதிரி வணக்கம் புரியணும், புரிஞ்சுதா?"

"உத்தரவுப்படி" என்று கூறி வணங்கினேன்.

காற்றில் தங்கத்தின் புடவைத் தலைப்புக் கொடியாகப் பரிணமித்துப் பறந்து, என் உடலைத் தொட்டு ஆசீர்வாதம் செய்தது.

○ ✶ ○

பேஷாய் முடியும்!

பிரபல பிரெஞ்சு நாவலாசிரியரான அலெக்ஸாண்டர் டூமாஸுக்கு ஓர் ஆரம்ப எழுத்தாளன் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதியிருந்தான்:—

"ஐயா, நான் ஒரு நீண்ட நாவல் எழுதி வைத்திருக்கிறேன்; அதைத் தாங்கள் சீர்திருத்தி ஒழுங்கு செய்து கொடுத்தால் மேற்படி நாவலை என் பெயருடன் தங்கள் பெயரையும் சேர்த்து வெளியிடுகிறேன்."

இதைப் படித்த டூமாஸ் "கழுதையும் குதிரையும் எங்காவது ஒன்று சேர்ந்து வேலை செய்ய முடியுமா?" என்று பதில் எழுதிப் போட்டார். மறு நாள் அவருக்கு இன்னொரு கடிதம் வந்தது. அது வருமாறு:—

"ஏன் முடியாது? பேஷாய் முடியும்! — இப்படிக்கு, குதிரை."

படித்துப் பார்!

தமிழ் முரசு

[ஆசிரியர்: ம. பொ. சிவஞான கிராமணியார்; பிரசுரம்: தமிழ் முரசு பதிப்பகம், 233. லிங்கச்செட்டித் தெரு, சென்னை; விலை: அணா 6.]

சென்னை மாநகரத்தில் தேச பக்தியில் சிறந்த வீரத் தமிழர் யாராவது இந்த நாளில் உண்டு என்றால் அவர் ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியாராய்த்தான் இருக்க முடியும். இதை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் நமது ஆந்திர சகோதரர்கள், "சென்னை நகரத்துக்கு வேறு யார் பிரதிநிதியாக வந்தாலும் சரி, ஸ்ரீ கிராமணியார் மட்டும் வரக்கூடாது!" என்று தீர்மானித்து அவ்விதமே காரியத்திலும் நடத்தி விட்டார்கள்.

பழந் தமிழ் வீரர்களான பாரதியையும், வ. உ. சிதம்பரம் பிள்ளையையும் சற்று நினைவு கூர்ந்து பாருங்கள். அவர்களுடைய வீரத் தமிழ் மீசையே இன்று நம்முடன் வாழும் ஸ்ரீ சிவஞான கிராமணியாரின் முகத்தையும் அலங்கரிக்கிறது.

ஸ்ரீ கிராமணியார் பிரசங்க மேடையில் ஏறிப் பேச ஆரம்பித்து விட்டால் கடல்மடை திறந்த மாதிரி வீராவேசம் ததும்பப் பேசுவார். அலங்காரமான சொற்றொடர்கள் அடுக்கடுக்காய் வந்து விழும். சிலப்பதிகாரம், திருக்குறள், பாரதியார் பாடல் ஆகியவை வெள்ளம் தண்ணீர் பட்டபாடுதான். அவர் பேசுவதை அப்படியே ஒன்று விடாமல் எழுதிக் கொண்டு வந்தால் அது ஒரு முதல் தரக் கட்டுரையாக அமைந்து விடும்.

கிராமணியார் பிரசங்கத்தைக் கேட்கும் போதெல்லாம் "அடடா! ஒரு அழகான கட்டுரை வீணாய்ப் போகிறதே?" என்று நமக்குத் தோன்றுவதுண்டு.

இதோ, கிராமணியார் எழுத ஆரம்பித்து விட்டார். 'தமிழ் முரசு' என்ற மகுடம் தாங்கி மாதம் ஒரு தமிழ்ப் புத்தகம் வெளியிடத் தொடங்கிவிட்டார்.

கிராமணியாரின் வீரத் தமிழ் நடையைப் புத்தகத்தில் காணலாம். அவருடைய தமிழ்ப் பற்றுதலையும் தமிழர் மேன்மை பற்றிய கனவுகளையும் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம். புத்தகம் முழுதும் ஒரே தமிழ் மயந்தான்.

'தமிழ் முரசு' முதல் புத்தகத்தில் தமிழறிஞர் திரு. வி. க., மு. வரதராசனார், குருசாமி, குயிலன் முதலியவர்களுடைய கட்டுரைகளும், கவிதைகளும் காணப்படுகின்றன.

இவ்வளவு அருமையான புத்தகத்தின் விலை ஆறு அணாதான். தமிழிலும் தமிழ் நாட்டிலும் பற்றுடையவர்கள் எல்லாரும் "தமிழ் முரசு" புத்தகத்தைப் போற்றி வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

யோக சமுச்சயம்

[ஸ்ரீ அரவிந்தர் அருளியது: மொழி பெயர்ப்பு: கே. எஸ். வெங்கடராமன்; பிரசுரம்: ஸ்ரீ அரவிந்த ஆசிரம அச்சுக் கூடம், புதுச்சேரி; விலை: ரூ. 1.]

மகான் அரவிந்தரை அறியாதவர் இருக்க முடியாது. தேச நலனுக்காகச் சகல நலன்களையும் தியாகம் செய்த சிறந்த தேசபக்தர். உயர் பதவியை உதறி எறிந்த உத்தமர். அந்த யோகானுபவம் பெற்ற அரும் பெரும் யோகி. புதுவையில் வாழும் பூரண மெய்ஞ்ஞானி.

அவர் எல்லா யோகங்களையும் அறிந்து அவைகளின் சாரத்தைத் தொகுத்து யோக சமுச்சயம் என்று ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு இது.

வையதல அவா, அதற்குத் துணை செய்யும் அகம்பாவம், புலனுணர்ச்சிகளின் விடாப்பிடியான பற்றுதல்கள் இவற்றை அறவே நீக்கவேண்டும். அடர்ந்த அஞ்ஞான இருளையகற்றி ஞான ஒளியைப் புகுத்தி அந்த ஒளியோடு ஒன்றி நின்று, ஒரே கருத்தில், ஒரே விஷயத்தில், ஒரே தத்துவத்தில் நினைப்பையும் மனோபாவங்களையும் நாட்டி நிற்பது தான் பூரண யோகமாகும். பூரண யோகத்தைப் பற்றிப் பூரணமாகவும், விரிவாகவும் விளக்கப்பட்டிருக்கிறது இந்நூலில். சிந்தைக்கும் வாக்குக்கும் எட்டாத யோக சாஸ்திரத்தை அதற்கேற்ற உயர்ந்த நடையில் மொழி பெயர்த்திருக்கும் ஆசிரியர் நம் பாராட்டுக் குரியவர். யோக சமுச்சயம் என்னும் இந்நூல் யோக சாதகத்தில் பற்றுக் கொண்டவர்களுக்கு இன்றியமையாத அற்புதமான நூல் என்பதில் சமுசயமில்லை.

கலை (மாதம் ஒரு புத்தகம்)

[பதிப்பாசிரியர்கள்: எம். எஸ். பாகு—சகலவதி பாகு; பிரசுரம்: பாசாக காரியாலயம்; பெரம்பூர், சென்னை; விலை: அணா 8.]

மழ மழப்பான ஆர்ட் காகிதத்தில் பளபளப்பான சினிமா நட்சத்திரப் படங்களுடனும் கலைஞர்கள் படங்களுடனும் சினிமா விமர்சனம், நாடக விமர்சனம், சினிமாச் செய்தி முதலிய பல அம்சங்களுடனும் மாதம் ஒரு முறை வெளியாகும் புத்தகம் இது. இரு வர்ண மூவர்ண சித்திரங்கள் இப்புத்தகத்தில் அபரிமிதமாக மினுக்கின்றன. கலை வளர்ச்சிக்காகப் போராடும் இப் புத்தகம் சிறந்த வெற்றியடையும் என்பதற்குப் புத்தகத்திலேயே அறிகுறிகள் இருக்கின்றன.

யானையின் யுக்தி!



'க்யூ' வரிசையில் நின்று டிக்கட் வாங்கும்போது யானை செய்த யுக்தி!


சைபால்
CIBOL
சைபால்
for
RING
WORM
SOUTH INDIAN M
முகப்பரு, சேத்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப் பட்ட புண், கரப்பான் முதலிய வைகளுக்குக் கை கண்ட மருந்து
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை


IODISAL
The best
BLOOD PURIFIER
MANUFACTURERS
SOUTH INDIAN MFG Co
MADURA
அயோடிசால்
மிகச் சிறந்த
ரத்த சுத்தி மருந்து
இது திரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.
ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



LKI ஜூன் ௨, 1946 4 அணா

Regd. No. M. 4392



Agents For Salem & N. Arcot Dts. The General Agencies Corporation First Agraharam, Salem. Agents For Nilgiris: Messrs. Brilliant Traders, Ootacamund.